
"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஐப்பசி -கார்த்திகை - மார்கழி 1996




லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆத்மீகக் காலாண்டிதழ் £1.00




ஆசிரியர்: திரு மு. நற்குணதயாளன் துணை ஆசிரியர்: திரு க. ஜெகதீஸ்வரன்

நிர்வாகப் பொறுப்பு: திரு வ.இ. இராமநாதன், துணை நிர்வாகம்: திரு. சிவ. அசோகன்

நிர்வாகக்குழு

திரு மாணிக்கம் சுரேஷ், திரு இ. முருகதாசன், திரு ந. சிவராசன்

திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம், திரு சி. அற்புதானந்தன், திரு பொ. சுந்தரலிங்கம்

**KALASAM, 42 Stoneleigh Road, Clayhall, Ilford, IG5 0JD, England**
**Tel : 0181 550 4233**

ஈசன் நெறி பரப்ப இன் தமிழ் வளர்ப்போம்

# கலசம்

ஐப்பசி - கார்த்திகை - மார்கழி 1996

மணி 4 ஒலி 16

## கலசம் பக்கம் சார்ந்ததே!

கலசத்தின் பதினாறாவது படிக்கல் இது.
தீபாவளி தினத்தை ஒட்டி இக்கலசம் மலர்கிறது.
பலவித குற்றச்சாட்டுகள்-
பலவித அரவணைப்புகள்-
இவைகளையெல்லாம் விருப்பு வெறுப்பின்றி
தன்னுள் ஜீரணித்து கம்பீரமாக வெளிவருகிறது கலசம்.
தட்டிக் கொடுக்கும்போது தன்வயமாகி மகிழ்ச்சி
கொள்ளும் மனித இனம் தட்டிக்கேட்கும் போது தடுமாறுகின்றது.
கலசம் முரண்பாடான விடயங்களில் தன் தலையை நுழைத்து
நடுவு நிலைமையிலிருந்து நழுவுகின்றது என்று குற்றஞ்சாட்டித்
தப்பிக் கொள்வதிலும் மனிதன் அசகாய சூரனாக இருக்கின்றான்.
கலசம் நடுவு நிலைமை இதழ் அல்ல என்பதை மதிப்புக்குரிய
வாசகர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.
கலசம் சைவசித்தாந்தக் கொள்கைகளோடு நூறுவீதம்
இணைந்த ஒன்று என்பது மட்டுமே உண்மை.
கலசம் சைவ முன்னேற்றச் சங்கத்தின் வெளியீடு. ஆதலால் இது
சைவசித்தாந்தக் கொள்கைகளை தன் சார்புக் கொள்கையாகக்
கொண்டதே நிதர்சன உண்மையாகும். எந்தப் பக்கமும்
சாராமல் நடுவு நிலைமை என்ற போர்வையில் மதில் மேற் பூனையாக கலசம் இருக்காது.
சமயசம்பந்தமான பிரச்சினைகள் வரும்போது நமக்கென்ன என்ற
பாணியில் கலசம் இருக்காது. பிரச்சினைகளுக்குள் தன் தலையை நுழைத்து
தனக்கே உரித்தான பாணியில் அலசி ஆராய்ந்து அபிப்பிராயங்களை வெளியிட
கலசம் முன்னணியில் நிற்கும்.சைவத்தின் கொள்கைகளைப் பரப்புவதோடு
சைவம் பாதிக்கப்படும்போது அதைத்தட்டிக் கேட்கும்
உரிமையையும் வல்லமையையும் கலசம் கொண்டுள்ளது என்பதே கலசத்தின் பலம்.
இந்த ஆத்மீகப் பலத்தின் துணிச்சலான பார்வைகளும் அறுவடைகளுமே
எங்கள் படைப்புகள். ஒரு சில அரைகுறை வேதாந்திகள் கலசத்தின் இப் பலத்தை
தவறான கண்கொண்டு பார்ப்பது அவர்களின் தவறே ஒழிய எங்களது அல்ல.
மதம் என்பது வெறுமனே வாழ்க்கைப் பாதையைக் காட்டும் ஒன்றாக இல்லாமல்
காலத்தோடு இயைந்த விமர்சனங்களையும் வரவேற்று உள்வாங்கி வடிவமைத்து
வெளிவழங்கும் தன்மை வாய்ந்தது என்பதிலும்- அந்த மதம் எங்கள் சைவ மதம் தான்
என்பதிலும் அசையாத நம்பிக்கை கொண்டவர்கள நாங்கள். கலசம் இந்த நம்பிக்கைகளின்
பலமான கூடாரம்.இந்தக் கூடாரத்துக்குள் நீங்களும் ஒருவராக இணைந்து கொள்ளுங்கள்.
வாருங்கள் வரவேற்கிறோம்.
தாருங்கள் ஆதரவை, பெற்றுக்கொள்கிறோம்.
ஓம் நமசிவாய!
ஆசிரியர்

# வள்ளிமணாளா போற்றி போற்றி!!!



நஞ்சுண்ட கண்டனின் நேசக் குமாரனும் நீநினைந்துருகும்
நங்கையர்க்கு நலன் செய்யும் நேசனும் நீ
பஞ்சுமேனிப் பாவையர்க்குப் பருவத்தோழனும் நீ
பிஞ்சுக் குழந்தைக்குப் பாங்கான தாயும்நீ
தஞ்சமென வருபவர்க்குத் தயங்காது துயர் துடைக்கும்
தர்மத்தின் தலைவனும் தயாளனும் நீயே
மிஞ்சிவரும் மேனாட்டு மோகங்கள் மேவாத் தடுத்துவரும்
மெய்யடியார் காவலனே உன்பாதம் போற்றி போற்றி


வாரியணைத்தும் அன்னைக்கு வசையாது வெற்பிலுறைந்தவனே
வாவென்றழைத்த தொண்டரைத் தேடிச் சீமைக்கு வந்தவனே
மாரி மழைபோல் பனிகொட்டும் லண்டனில் மனமொத்து உறைபவனே
மேவியபாதம் போற்றுமடியார்க்குத் மேன்மை யளிப்பனே
சீரிய தமிழைச் சிந்திய ஔவைக்குச் சுவைப்பழமீந்தவனே
சூரனை வதைத்துத் தேவரைக்காத்த சுப்பிரமணியதேவே
காரிருள் சிந்தைக் கொடுங்கோல்
கடுஞ்சமர் மருந்தெனக் காட்டிய கடவுளே போற்றி!

தந்தையும் தாயும் தலை சிறந்தோரெனத் தரணிக்கு
தெளிவித்த ஔவை தரிசித்த சிறுவனும் நீயே
சிந்தை மகிழச் சிவனுக்கே சிறந்தநல் வேதத்தை
செப்பிய செந்தமிழ்ச் சிறுவனும் நீயே
முந்தையுரைத்த வேதமொழியும் நல்லமூதுரையும்
முத்தமிழும் மங்கா திம்மண்ணில் காக்கு முமைபாலா
விந்தைக்குமரா வினைதீர்க்கும் வித்தகா ஸ்ரீமுருகா
வள்ளிமணாளா உன்பாதம் போற்றி போற்றி

**செ. நாகேந்திரன்**

# சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்.

மு. நற்குணதயாளன்



இதுவரையில் திருவாசகத்தின் நான்கு பாடல்களைப் பார்த்திருந்தோம். இறுதிப் பாடலில் பெலவிகரணி காளியை எழுப்புவதாக அமைந்திருந்தமையை வாசகர்கள் நினைவுக்குக் கொண்டு வருதல்வேண்டும். ஐந்தாவது பாடலில் காளியானவள் இரவுத்திரியை எழுப்புவதாகப் பாடல் அமைந்துள்ளது.

*மால் அறியா நான்முகனும் காணா மலையினைநாம்*
*போல் அறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்*
*பாலூறு தேன்வாயப் படிறீ கடைதிறவாய்*
*ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்*
*கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்*
*சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று*
*ஓலம் இடினும் உணராய் உணராய்காண்*
*ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்*

*அயனாலும் மாலாலும் அறியமுடியாத ஜோதி மலையை நாம் எப்படி அறிவோம்? ( இங்கு பொக்கம் எனப்படுவது பொய்மையாகும்) பாலும் தேனும் ஊறினாற் போல பொய்மை பேசுகின்றவளே, வாசல் கதவைத் திற? விண் மண் மற்றைய உலகங்களும் அறிய முடியாத அவனின் திருக்கோலத்தை நாம் பாடினோம். அவன் நம்மை ஆட்கொண்டுவிட்டான். சிவனே சிவனே என்று மகிழ்ச்சியால் ஓலமிட்டோம். மயிர்ச் சாந்தணிந்த கூந்தலையுடைய பெண்ணே இதெல்லாம் நீ அறியாதவளா? இன்னுமா தூங்குகின்றாய்? எழுந்திரம்மா.*

காளியினுடைய முயற்சியால் எழும்பிய இரவுத்திரி, விழிப்படைந்து சேட்டையை எழுப்புவதற்காகச் செல்கிறாள்.

மானே நீ நென்னலை நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்து எம்மைத் தலையளித்து
ஆட்கொண்டருளும் வான்வார் கழல்பாடி
வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர்
எம்பாவாய்.

நாளை வந்து எங்களை எழுப்புவதாக நீ நேற்றுக் கொடுத்த வாக்கை எந்தக் காற்றில் பறக்கவிட்டாய்? உனக்கு இன்னமுமா விடியவில்லை? ( இங்கு நென்னலை என்ற சொல்லு நேற்று எனும் கருத்தைக் கொடுக்கிறது) வானும் நிலவும் பிறவும் அறியமுடியாத எம்பெருமான் தானாக வந்து எம்மை ஆட்கொண்டான். அவனுடைய புகழை நாம் பாடும்போது நீ ஏன் வாய் திறவாது இருக்கின்றாய்?. அவன் புகழ் உன்னை அடைந்தும் உருகாது எப்படித்தான் இருக்கிறாய்? நம் தலைவனை நாம் போற்றிப் பாடவேண்டாமா? தூக்கத்தை விட்டு எழுந்துவாடி நாம் பாடுவோம்.


சேட்டை எழுந்து சென்று வாமையை எழுப்புகின்றாள்.

அன்னே அவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற்கு அரியன் ஒருவன் இருஞ்சீருான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய் திறப்பாய்
தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகுஒப்பபாய்
என்னானை என்அரையன் இன்னமுதுஎன்று எல்லாமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ?
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

*பெண்ணே நீ தூங்குவதுபோல் பாசாங்கு செய்கின்றாய்? ஏன் இந்த விளையாட்டு உனக்கு? ஒப்பற்றவன் தேவர்கட்கும் அருமையானவன். பெரும் புகழ் மிக்கவன் எங்கள் சிவபெருமான். அவனுடைய வெற்றிச் சின்னங்கள் கேட்டதும் அவன் புகழ் பாடும் இயல்பு கொண்டவள் நீ. தென்னா என்ற சொல்லைக் கேட்டதுமே உருகுவாயே? நாங்கள் எல்லாம் எம் அரசன் எமக்கு உரியவன் என்று கூறுவோம். இன்னும் நீ உறங்குகின்றாயா? உன் நித்திரை விட்டு எழுந்திரம்மா*

உலக மாயையில் மூழ்கிக்கிடக்கும் ஆன்மாவை ஓடி ஓடி மாணிக்கவாசகர் எழுப்புகின்ற தன்மை எவ்வளவு அழகாகவும் ஆழமாகவும் இருக்கின்றது. இத்தகு சிறப்பு வாய்ந்த திருவெம்பாவையை நாம் நாள்தோறும் படிக்கவேண்டும் - இறைவன் அருளைப் பெறவேண்டும். அடுத்த தடவை வாமை சிவசக்தியை எழுப்புகின்ற பான்மையைப் பார்ப்போம்.
(தொடரும்......)

## சிதம்பரத்துச் சிற்பம்



இவ்விதழில் வரும் சிதம்பரத்துச் சிற்ப ஓவியங்கள் சில்பி அவர்களால் வரையப்பட்டவை.
இவை நன்றியறிதலுடன் மங்கை ஆலயச் சிறப்பிதழிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டவை

# சைவ முன்னேற்றச் சங்கத்தின் 19 ஆவது ஆண்டுப் பூர்த்திவிழா

சேவைகளிலெல்லாம் பெரியது மானிட சேவையே. மானிடசேவையை எல்லோராலும் புரிந்து விடமுடியாது. அதற்கென்ற மனோபலம் உணர்வில் கலந்து உதிரத்தில் சேரவேண்டும். இத்தகு உயரிய மாண்புறு சேவையை சைவ முன்னேற்றச் சங்கம் கடந்த பத்தொன்பது ஆண்டுகளாக மாசுமறுவின்றிப் புரிந்து வருகின்றது. ஒரு இனத்தின் அல்லது தேசத்தின் வருங்கால முதுகெலும்புகள் அவ்வினத்தின் அல்லது தேசத்தின் வருங்காலச் செல்வங்களே. இந்த வருங்காலச் செல்வங்களை சரியான முறையில் நெறிப்படுத்தி சீர்ப்படுத்தி எதிர்காலச் சமுதாயத்தின் கரங்களில் ஒப்படைப்பது நிகழ்காலச் சமுதாயத்தின் தலையாய பணியாகும். இப் பணியை சைவ முன்னேற்றச் சங்கம் பல திசைகளில் புரிகின்றது.

சிறார்களின் தாய்மொழிக் கல்வியில் கவனம் கொண்டு தமிழ்ப்பாடசாலையை செவ்வனே நடாத்தி வருகின்றது. சிறார்களின் உணர்வுகளை மென்மையாக்கும் இன்கலைகளை உரிய ஆசிரிய ஆசிரியைகளை ஒழுங்கு செய்து கற்பித்தும் வருகின்றது.

ஒரு மனிதன் இருதடைவைகள் குழந்தை நிலையை அடைகின்றான். பிறக்கும்போதும் பின்பு வயோதிபப ருவம் அடையும்போதும் குழந்தையாக இப்பூமியில் வாழ்கின்றான்.

இந்த வயோதிபக் குழந்தைப்பருவமும் முறைப்படி பராமரிக்கப்படவேண்டிய ஒரு பருவமாகும். இந்நிலையையும் மனத்தில் கொண்டு வயோதிபர் பராமரிப்பு நிலையம் ஒன்றை உருவாக்கி உயரிய சேவையை அவர்களுக்கு அளித்து வருகின்றது சங்கம்.

மனிதன் இறந்தபின்பு அவனின் ஆத்மாவும் ஆத்மாவை அப்பிறவியில் சுமந்த உடலும் வாழ்வில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஆத்மாவை ஈடேற்ற தேவார திருவாசகங்களை இறைவனைக் குறித்துப் பாடியும் உடலை அடக்கம் செய்ய சில கிரியைகளில் உதவிபுரிந்தும் மாண்பரிய பணி புரிகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக மனிதன் மானிடசேவை புரியவும் இறைவனைப் புரிந்து கொள்ளவும் அறிவுப்பசி கொண்டலைகின்றான். இவ் வறிவுப்பசியினை தாராளமாக அள்ளி வழங்க மூன்று தாத்ததுக் கொருமுறை கலசம் என்னும் ஆத்மீக சஞ்சிகையை வெளியிட்டும் வருகின்றது.

இத்தகு அளப்பரிய மானிடசேவைகளைப் புரிந்துவரும் சைவ முன்னேற்றச் சங்கம் இன்று தன் பத்தொன்பதாவது வயதை முடித்து இருபதாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது.

எல்லோருமாகச் சேர்ந்து சைவ முன்னேற்றச் சங்கத்தை மேன்மேலும் சேவைகளில் சிறந்து விளங்க வாழ்த்துவோம்.

# றோயல் மண்டபத்தில் இன்னிசை மழை

இந்தியாவில் மிகப் பிரபலமான இசைவித்தகர் பத்மஸ்ரீ கே. ஜே. ஜேசுதாஸ் அவர்களின் இன்னிசை மழை றேயல் மண்டபத்தை அன்று நிறைத்தது. மண்டபம் நிரம்பிய கூட்டம்.

தமிழிசை மண்டபத்தின் சுவர்களில் பட்டுத்தெறித்தபோது உள்ளம் உவகையால் துள்ளிக்குதித்தது.

அழகான அசைவுகள் இனிமையான சாரீரம் இதயத்தைத் தட்டிக்கேட்கும் கணீரென்ற சப்தம்.

அடக்கமான பார்வையாளர்கள். இம்மியும் அசையாது இசையோடு ஒன்றிப்போன பாவம்.

என்ன சுகானுபவம்.

இந்த இனிய சுகானுபவத்தை அன்று தந்தவர்கள் யார்? இதனை எமக்கு அள்ளிஅள்ளித்தந்த சைவ முன்னேற்றச் சங்கத்தினரையும் சுருதிலய சங்கத்தினரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

வாழி அவர்தம் கலைத்தொண்டு!!

-நல்லியல்புவள்ளல்-

# பிதுர்களின் ஆசிகளைப் பெறும் மாளயப்பட்ச சிரார்த்தம்.

-எஸ் மனோரமா-

தர்மம் ஒழுக்கம் ஆசாரநெறி முறைகள் அடக்கம் நல்லெண்ணம் நற்செயல் ஒழுக்கம் தவறாமை என்னும் நற்பண்புகளினால் மனிதன் உயர்ந்த நிலை அடைகிறான். வேத ஆகம முறைப்படி எவன் ஒழுகி நிற்கின்றானோ அவனே இறைவனினால் நேசிக்கப்படுகின்றான். பெற்ற தாய் தந்தையரைத் தெய்வமாகக் கருதி அவர்களின் மனதை மகிழ்ச்சிப்படுத்தி பணிவிடை செய்வது நற்பண்பு. அவர்கள் உயிரோடு இருக்கும் போதும் பின் அவர்கள் இறையடி சேர்ந்து முத்திகாலத்திலும் அவர்களுக்கு செய்கின்ற நன்றிக்கடன்களே எம்மை நம் வாழ்வை சிறப்படையச் செய்யும்.

இறையடி சென்றடைந்த முன்னோர்களுக்கு ஒவ்வொரு வருடமும் வரும் புரட்டாதி மாதம் கிருஷ்ணபட்ச காலம் மஹாளய பட்சம் என அழைக்கப்பட்டு சைவமக்களால் புண்ணிய நாட்களாக அனுசரிக்கப்படுகிறது. இறந்த முன்னோர்களுக்குச் செய்யும் கடன் சிரார்த்தம் என அழைக்கப்படுகிறது. சிரார்த்தம் சனாதன தர்மப்படி நடந்து வருகிறது. பிதுர் தேவதைகள் சந்திர லோகத்தில் வசிக்கின்றார்கள். அவர்களுக்கு சுக்கிலபட்சபகலும் கிருஷ்ணபட்ச இரவும் ஒரு சந்திரமான மாதம் பகலிரவு கூடிய ஒரு தினமாகும். அமாவாசை தினத்தில் சந்திரன் எமக்கு தெரிவதில்லை இருளாகி விடுகின்றது. ஆனால் அதே தினத்தில் பிதுர்கள் இருக்கும் சந்திர கோளம்பாதி முழுவதும் அவர்களுக்கு பிரகாசத்தைத் தருகின்றது.

எங்களுக்கு அமாவாசை தினம் பிதுர்களுக்கு பகலாகவும் ஒவ்வொரு பௌர்ணமி தினம் நடுராத்திரியாகவும் அமைகிறது. கிருஷ்ணபட்ச அட்டமி அவர்களுக்கு சூரிய உதய காலமாகவும் சுக்கிரபட்ஷ அட்டமி தினம் சூரிய அஸ்தமன காலமாகவும் அமைகின்றது. அமாவாசை தினம் பிதுர்களுக்கு உணவு உண்ணும் உச்சிக்கால நண்பகல் நேரமாக அமைகின்றது. புரட்டாதி மாதம் கிருஷ்ணபட்ச காலமான பதினைந்து தினங்களும் சிரார்த்தத்திற்குரிய புண்ணிய நாட்களாக ஆராதிக்கப்படுகின்றது இப்பதினைந்து தினங்களும் விடாது சிரார்த்தம் செய்து வந்தால் ஒருவருடம் முழுவதும் சிரார்த்தம் செய்த புண்ணிய பலன் நமக்குக் கிடைக்கின்றது. ஆதலால் இல்லற வாசிகள் இக்காலத்தில் பிதுர்களைத் திருப்தி செய்து அவர்களின் ஆசிகளைப் பெற்றால் வாழக்கை இன்பமாக இருக்கம். அவர்களை திருப்தி செய்யாவிடில அவர்களின் சாபம் காரணமாக பல இன்னல்கள் ஏற்படும். மஹாளயபட்ச காலத்தில் பிதுர்கள் தென் திசையில் இருந்து தேவர்கள் போல கண்ணுக்குப் புலப்படாத அணுவைப்போல சுத்தமுடையவர்களாக தம் வம்சத்தவர்களின் ஆராதனைகளை எதிர்பார்த்து பூமிக்கு வருகின்றார்கள் அவர்களை ஆராதித்து சிரார்த்தம் செய்து ஆசிகளைஎம் வருங்கால வம்சத்தவருக்கம் பெற்றுக் கொடுத்து நாமும் பெற்று நல்வாழ்வு வாழ்வோம்.

---

**வாசகர்களிடமிருந்து தரமான சமயசார்புக் கட்டுரைகளை எதிர்பார்க்கின்றோம். தரமானவைகளைப் பிரசுரிப்போம்.**

42, Stoneleigh Road
Clayhall
Ilford
Essex
IG5 0Jd

# நல்வரமதை நல்கும் நவராத்திரி விழா

-தேவலோகேஸ்வரசர்மா

அகில உலகங்களுக்கும் அன்னையாய் விளங்குகின்ற மகாசக்தியானவள் லோகக்ஷேமத்திற்காக மகிஷாசுரன் என்ற மூர்க்க அசுரனுடன் போர் செய்து அவனை வதைத்து சம்காரம் செய்து தேவர்களின் துயர் தீர்த்த திருநாளே நாங்கள் நோன்பிருந்து அனுஷ்டிக்கும் நவராத்திரி திருநாள். புரட்டாதி மாத பூர்வபக்ஷத்து பிரதமை( அமாவாசை முடித்த பிரதமை திதி) தொடக்கம் தசமி திதி வரை பத்துத் தினங்கள் இந்த நவராத்திரி விழா நடைபெறும். முத்தேவிகளாய் அமர்ந்து அம்பிகை நல்லருள்



புரியம் திருநாள் இதுவாகும். பத்து நாட்கள் வரும் போது ஏன் நவராத்திரி என ஒன்பது தினம் கொண்டாடுகின்றோம் என்ற கேள்வி யாவருக்கும் மனதில் எழலாம். நவ என்பது ஒன்பது. மலைமகள், அலைமகள், கலைமகள் என முத்தேவிகளுக்கும் மூன்று நாட்கள் கணக்கில் இரவிலே விசேஷ பூசைகள், வழிபாடுகள் செய்கின்றோம். சரஸ்வதி பூசைதான் ஒன்பதாம் நாள் இரவின் விசேட பூசை . விஜயதசமி அன்று ஆலயங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் இரவிலே பூசை செய்வதில்லை. ஆலயங்களில் மகிஷாசுர சம்காரம் நடைபெறுவதால் விஜயதசமி அன்று இரவிலே பூசை செய்வார்கள். விஜயதசமி அன்று காலையே "கும்பச்சரிவு" நடாத்திவிடுவார்கள். இரவுப்பூசை ஒன்பது தினங்கள் வருவதால் நவராத்திரி என்ற நாமம் இவ் நோன்புக்கு ஏற்பட்டது. நவராத்திரிக்கு என நாம் வைக்கும் கும்பம் ஒன்பது நாள் பூசையில் தான் இருக்கின்றது. பத்தாம் நாள் கும்பம் பிரித்து புனித தீர்த்தமும் விதை விதைத்து வளர்த்த நவதானியங்களும் விரத அடியார்கள் பிரசாதமாக எடுத்துக் கொள்வார்கள்.

இந்த நவராத்திரி சில காலங்களில் எட்டு நாட்கள் ஒன்பது நாட்கள் என்ற கணக்கில் வருவதுண்டு.

இதனால் எம்மவர்கள் குழப்பங்க ளுக்கு உண்டாவதுண்டு. இதன் விபரம் யாதெனில் அம்பிகை ஒன்பது திதிகள் மகிஷாசுரனோடு போர் செய்து பத்தாவது திதி அன்று அவனை வதம் செய்தாள். புரட்டாதி மாத பூர்வ பட்ஷ பிரதமை முதல் நவமி வரை போர் புரிந்து தசமி சம்ஹாரம் செய்து வெற்றிவாகை சூடினாள். விஜய என்றால் வெற்றி என்று பொருள். அதனாலேயே வெற்றி கொண்ட அந்த தசமிதிதி விஜயதசமி ஆக வழங்கப்படுகின்றது. இந்தத் திதிகள் ஒரே நாளில் இரண்டாகவும் சிலவேளை மூன்றாகவும் வருவதால் எட்டு ஒன்பது நாட்களில் நவராத்திரி விழா வருவதுண்டு. இருப்பினும் ஒன்பது திதிகளும் வந்து தசமி திதிவரும். இதனால் குழப்பம் தேவையில்லை. அதேபோல் மகிஷாசுரன் கொடுமையால் தேவர்கள்

தமது வீரம் செல்வம் கல்வி அனைத்தையும் இழந்தார்கள். வீரம் உடைய தேவர்களை கோழையாக்கி அடிபணியவைத்தான். அவர்களுடைய சொத்துக்கள் எல்லாவற்றையம் அபகரித்தான். அவர்களுக்கு மதுவைக் கொடுத்து மதி இழக்கச் செய்து தன்னையே கடவுளாக வணங்கச் செய்தான். இத்தனை கொடுமைகளை அனுபவித்த தேவர்களுக்கு நல்லருள் வழங்கவேண்டி அம்பிகை அசுரனை வதம் செய்தாள். முறையே துர்க்கை, லக்சுமி,சரஸ்வதி வடிவங்களாக வந்து தேவர்களுக்கு மீண்டும் வீரம்,செல்வம்,கல்வி என நல்லருள் வழங்கினாள். இதனையே பூவுலகில் நாம் நவராத்திரி தினமாகக் கொண்டாடுகின்றோம்.

வெறும் பகட்டிற்காக கோவில் சென்றும் மற்றவர் வீடுகளில் செய்கின்றார்கள் நாமும் செய்ய வேண்டும் என்றும் இந்த புனித நோன்பை நாம் கொண்டாடாமல் ஒவ்வொருவருடைய மனங்களிலும் நின்று ஆட்சிபுரியும் பொறாமை. பொய். காமம். குரோதம், வஞ்சகம் இவைகளோடு கம்பீரமாக நிற்கும் நான் என்ற ஆணவம் ஆகிய இவைகளை சம்ஹாரம் செய்து இந்த புவிக்கு எப்படி ஒன்றுமே இல்லாமல் வந்து பிறந்தோமோ அதேபோல் தான் போகவும் போகின்றோம் என்பதை உணர்ந்தவராய் நிலையற்ற உலக வாழ்வில் மற்றவருக்கு விட்டுக் கொடுத்து என்றுமே நிலைக்கும் ஆன்மீக ஞானத்தைக் கடைப்பிடிப்போமாக. இந்நாளில் முத்தேவிகளின் அருளை நாம் பெற்றுய்ய அபிராமிப்பட்டர் மிக அழகாக ஓர் அந்தாதி பாடியுள்ளார். அதை நாமும் மனமுருகப் பாடுவோமாக.

**தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா**
**இனம் தரும் நல்லனவெல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே**
**கனம்தரும் பூங்குழலால் அபிராமிக்கடைக்கண்களே.**

இதன் பொருள் மலர்களை அணியப்பெற்றதும் கார்மேகம் போன்ற கரியதுமாகிய கூந்தலையுடையதுமாகிய அபிராமி அம்பிகையின் கடைக்கண் பார்வையானது அன்பர்களான பக்தருக்கு செல்வம், கல்வி, எந்நிலையிலும் வாடாத மன வலிமை, தெய்வப்பிறப்பு என்பன தரும். மேலும் மனத்தூய்மை யுடைய அடியார் உறவையும் எல்லா மங்களங்களையும் தரும் என்பதாகும். இந்தப் புனித நவராத்திரி நோன்பை மனத்தூய்மையுடன் கடைப்பிடித்து நாமும் அந்த அபிராமியம்பிகையின் திருவருட் கடாட்ஷம் பெற்றுய்வோமாக.

---


# MARKANDAN & CO
## *SOLICITORS*
***Empowered to Administer Oaths***

Legal Aid

*TAMIL HOUSE*
*720, ROMFORD ROAD*
*MANOR PARK*
*LONDON E12 6BT*

## M. MARKANDAN LLB

* ALL ASPECT OF IMMIGRATION MATTERS TO APPEALS TO EUROPEAN COURT OF HUMAN RIGHTS.
* ALL TYPES OF CONVEYANCING * LITIGATION* ALL COURTS CIVIL/ CRIMINAL* LANDLORDS/ TENANT MATTERS
* MATRIMONIAL* POLICE STATION ADVICE* ALL D.S.S AND HOUSING BENEFIT MATTERS
* FREE ADVICE FOR 15 MINUTES ON THE FIRST ATTENDANCE

**LEGAL AID**

**WE ARE ALWAYS FRIENDLY, EASY TO TALK AND KEEN TO HELP**

**TEL : 0181 514 8188**
**FAX : 0181 514 8303**

தொடர்கட்டுரை

# இந்து சமயம்





இயற்கையிலும் மனிதனிலும் கடவுளைக் கண்ட ராமகிருஷ்ணர் மனிதனிடத்திலுள்ள கடவுளுக்கு அவர் தம் சேவையை அர்ப்பணிக்குமாறு தமது சீடர்களைக் கேட்டுக் கொண்டார். அத்தகைய அன்பான சேவை மூலமே விரைவில் தூய்மையடைய முடியும். மேலும் விரைவான ஆன்மீக ஈடேற்றத்துக்கு அன்பான தெய்வ சிந்தையான தன்னலமற்ற சேவையை மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் ஆற்றவேண்டும் என்று கூறினார். மனித சமுதாயத்துக்கு சேவை செய்யும் இலட்சியம் விவேகானந்தரின் ஒழுக்கத்தில் ஆழப்பதிந்திருந்தது. ஒரு தனி ஆன்மாவுக்கு உதவ முடியுமானால் மீண்டும் இவ்வுலகில் ஒரு நாயின் பிறவியெடுக்கவும் நான் தயார் என்று விவேகானந்தர் ஒரு தடவை கூறியுள்ளார். மேலும் மனிதனை ஆக்குதல் தான் எனது வாழ்க்கையின் குறிக்கோள். நான் ஒரு அரசியல்வாதியுமல்ல சமூகசீர் திருத்தவாதியுமல்ல. என்னுடைய தொழில் மனிதனை உருவாக்குதலே. நான் ஆன்மாவைப்பற்றித் தான் அக்கறை கொண்டுள்ளேன். ஆன்மா சரியானால் எல்லாம் தானாகவே சரியாகிவிடும் என்று கூறுகிறார். வேறு ஒரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு ஆன்மாவும்

க. குணரத்தினம்

தெய்வீகத் தன்மையை உள்ளடக்கியுள்ளது. புறத்தேயும் அகத்தேயும் இயற்கையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தெய்வீகத் தன்மையை வெளிக் கொணர்தலே இலட்சியமாகும். கடமைமூலம், வழிபாடு மூலம், உளக் கட்டுப்பாடு மூலம் ,தத்துவார்த்த மூலம், இவை ஒன்றன் மூலமோ அல்லது எல்லாவற்றின் மூலமோ விடுதலை பெறலாம். என்று கூறுகிறார். ஆன்மீக வளர்ச்சியே

மக்களுக்கு இயைபு, சமாதானம் என்பவற்றைத் தரக் கூடியது. மனித வாழ்வு பண்பாடு கலாசாரம் என்பவற்றில் பெருமாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய காரணி சமயம் என்று கருதினார். கடவுள் மாற்றமடைவதில்லை. ஆனால் கடவுளைப் பற்றிய கருத்து காலப் போக்கிலும் சரித்திர ரீதியாகவும் மாற்றமடைந்து வந்துள்ளது என்பது விவேகானந்தரின் கருத்து.

"இந்தியாவின் முதலாவதும் முதன்மையானதுமான கடமை பொது மக்களிடத்தே கல்வியையும் ஆன்மீகத்தையும் பரவச் செய்வதேயாகும் என்கிறார் விவேகானந்தர். அதேவேளை பசியுள்ள மனிதருக்குப் போதிய உணவு கிடைக்காவிடின் அவரிடம் ஆன்மீகத்தை எதிர் பார்க்க முடியாது. ஆகவே எங்கள் மிக முக்கியமான உணவு உற்பத்தியில் புது முறைகளைக் கையாண்டு திறமையாக உற்பத்தியைப் பெருக்குவதின் மூலம் வறியவர்களுக்கும் உணவு இலகுவாகக் கிடைக்க வழி வகுக்க வேண்டும் என்கிறார்.

வெளிநாடுகளில் தமது பணியை முடித்துக் கொண்டு இந்தியாவுக்குத் திரும்பும் வழியில் 15-01-87 அன்று கொழும்பில் வந்து இறங்கினார். கொழும்பிலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் இந்துக்களால் பெரு வரவேற்பளிக்கப்பட்டது. பல்லாயிரக் கணக்கான மக்கள் அவரைத் தரிசித்து அவர் உரையைக் கேட்டனர்.

பின்னர் தமிழ் நாட்டிலுள்ள பாம்பனில் இறங்கிய போது இராச வரவேற்பு கிடைத்து தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் வரவேற்பும் அவர் உரைகளும் நிகழ்ந்தன. கல்கத்தாவிலும் சென்னையிலும் இராமகிருஷ்ண மிஷன் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பணிகள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டன. அவையாவன

(அ) கலை, விஞ்ஞானம், கைத்தொழில் என்பவற்றை கற்பிப்பதும் ஆதரிப்பதும்.

(ஆ) பாடசாலைகள் கல்லூரிகள் அனாதை இல்லங்கள் தொழிற்கூடங்கள் ஆய்வு கூடங்கள் வைத்திய சாலைகள் வலது குறைந்தவர்கள் நோயாளிகள் தங்க இல்லங்கள், பஞ்ச நிவாரண பணிகள் வேறும் அறப் பணிகள் என்பன.

இராமகிருஷ்ண மிஷன் ஆற்றும் பணிகளை சமயப்பணி பொதுப்பணி என இரு வகையாகப் பிரிக்கலாம். சமயப்பணிப் பிரிவில் ஆன்மீக வளர்ச்சிக்கும் புனித வாழ்வுக்கும் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட துறவிகளே இருக்கிறார்கள். பொதுப் பணிப்பிரிவில் துறவிகளைத்தவிர சாதாரண ஊழியர்களும் இருக்கிறார்கள். மடத்தில் சேர்ந்து நாலாண்டுகள் பிரமச்சாரிய வாழ்க்கை வாழ்ந்து கற்பன கற்று பின் காவி உடை தரித்து துறவிகளாகி சமுதாய சமயத் தொண்டில் ஈடுபடுவர். அவர் இலட்சியங்களாவன

(1) மனிதர்களுள் சமயங்களாலோ நிறத்தினாலோ குலத்தினாலோ வேற்றுமை காணாது எல்லோரும் ஒன்றே என்ற உறுதியான நம்பிக்கையில் செயற்படுதல்

(2) மனிதர்களின் மனத்தில் தெய்வத் தன்மையில் மனிதர்கள் யாவரும் ஒன்றே என்ற ஒற்றுமை உணர்ச்சியை விதைப்பது

(3) எல்லா நிலைகளிலும் அவர்களுக்குப் பணி புரிவது

(4) இடர்ப்பட்டவரின் இன்னல்களைக் களைவது

(5) குலத்தினாலோ கொள்கையினாலோ வேற்றுமை காணாது எல்லாரது மேன்மைக்கும் பாடுபடுவது.

உலகெங்கணும் அன்று நூற்றுக்கு மேலான நிலையங்கள் இராமகிருஷ்ணர் பெயரிலும் விவேகானந்தர் பெயரிலும் இயங்குகின்றன. ஆயிரத்துக்கு மேலான துறவிகள் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

(தொடரும்...)



# சிவபிரானும் விநாயகரும் ஒருவரா? இருவரா?

**கலாநிதி கெங்காதரன்**
மதுரை காமராசர் பல்கலைக்கழக சைவசமயத் துறைத் தலைவர்

சைவசமயம் சிவபெருமானை முழுமுதற் பொருளாக வழிபடும் கொள்கை உடையது. சிவம் என்ற சொல் நன்மை, மங்கலம் என்னும் பொருளைத் தருவது



மங்கலம் என்பதன் முழுமையான பொருளைத் தெரிந்து கொள்ள அமங்கலம் என்பதன் எதிர்மறை மங்கலம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அமங்கலம் என்பது துன்பம் என்பதைக் குறிக்கும். வாழ்வில் மிகப்பெரிய துன்பம் எது? இறப்பைவிட வேறு பெரிய துன்பம் வாழ்வில் எது இருக்கமுடியும். ஆகவே அமங்கலம் என்பது இறப்பைப் பற்றிய அச்சத்தைக் குறிக்கும். மங்கலம் என்பது அமங்கலத்திற்கு எதிர்ச்சொல் என்ற வகையில் இறப்பைப் பற்றிய அச்சத்தை வென்று வாழும் வாழ்வைக் குறிக்கும். உயிர் உடலோடு வாழும்போதே இறப்பைப் பற்றிய அச்சத்தை வென்று வாழும் வாழ்வை அருளும் சிவபிரானே மங்கலத்தை நாம் பெற உதவும் பெருமான் என்று அறியலாம்.

அச்சமில்லா வாழ்வு வாழ ஐயத்திலிருந்து நாம் முழுமையாக விடுபடவேண்டும். ஐயத்திலிருந்து உண்மையில் நாம் விடுபட்டால் தான் அச்சமில்லா வாழ்வு வாழ இயலும். ஐயத்திலிருந்து தெளிந்தவர் மனிதர் அடையக் கூடிய வீடுபேற்று உலகம் நாம் தற்போது இருக்கும் உலகத்தைவிட மிக அருகாமையில் இருக்கின்றது என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

*"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்*
*வானம் நணியது உடைத்து"*

–திருக்குறள்.

சிவபிரானை வழிபடும் போது சைவர் விநாயகர் முருகர் அம்மை ஆகிய திருவுருவங்களை எவ்வாறு நோக்குவது என்ற ஐயம் எழுவது இயல்பே. தமிழ் நாட்டில் வாழும் தமிழர்கள் மட்டும் அல்லாமல் கடல் கடந்து வாழும் தமிழர்களதும் ஐயத்தின் நீங்கித் தெளிவதற்கு அருமையாக உள்ளதை நாம் உணரலாம். உமாபதிசிவம் அவர்கள் அருளிய திருவருட்பயனில் உள்ள 5ஆவது பாடல் கடவுளின் தன்மையை நாம் நன்கு தெரிந்தகொள்ள உதவுகிறது. கடவுள் ஞானம் அல்லது அறிவு வடிவம் உடையவர். கடவுள் அறிவு வடிவம் உடையவர் என்பது

அறிவில்லா முட்டாளுக்குப் புதியது அல்லவா? கடவுளின் அறிவு வடிவத்தைப் புரிந்து கொள்வதற்கு நாமும் அறிவு பெறவேண்டும் என்ற உண்மை நமக்கு விளங்குகிறது. திருக்கோயிலில் நாம் காணும் விடையேறிய சிவபெருமான் உமையம்மை முருகனோடு கூடிய சிவபெருமான் நடராசர் போன்ற இருபத்தைந்து திருவுருவங்கள் நாமே நம் மனதில் கற்பனை செய்துகொள்ளும் வடிவங்கள் அல்ல. சிவபிரான்தான் அறிவு வடிவானவர். என்ற உண்மையை அனைத்து மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்துக்காக தன் திருவருளால் எடுத்துக் கொள்ளும் திருவடிவங்கள் என்று நாம் உணர வேண்டும் . இந்த நோக்கத்துடன் பார்க்கும் போது தான் திருவுருவங்களின் மேன்மையை நாம் உள்ளவாறு உணர்ந்து கொள்ள இயலும். ஆகவே இவ்வடிவங்கள் எல்லாம் சிவபெருமான் திருவருளின் வெளிப்பாடே அகும்.

*"அருவும் உருவும் அறிஞர்க்கறிவாம்*
*உருவம் உடையான் உளன்"*

–திருவருட்பயன்–5.

உரு என்பது முருகர் உமையுடன் கூடிய சிவபெருமான் ஆலமர் கடவுள் நடராசர் போன்ற இருபத்தைந்து வடிவங்களைக் குறிக்கும். அரு என்பது உருவம் அல்லாதது எனப் பொருள்படும். சிதம்பரத்தில் நடராசப் பெருமானுக்கு வழிபாடு செய்வார்கள். திரையை நீக்கினால் நமக்குத் தெரிவது ஆகாயம்தான். மேலும் சிதம்பரத்தில் உள்ள ஆகாயம் தான் இலண்டன் நியூயோர்க் டர்பன் போன்ற எல்லா இடங்களிலும் காணப்படுகின்றது. நடராசப் பெருமானை உருவத்தில் வழிபட்டது போன்று அருவத்திலும் வழிபடவேண்டும் என்பது தான் இங்கு அடங்கியுள்ள தத்துவம். இப்பாட்டில் உருவும் அருவும் என்பதற்குப் பிறகு அருவுருவம் என்றசொல்லும் அடங்கியுள்ளதாகச் சைவப்பெருமக்கள் கொள்வர். அருவுருவம் என்பது சிவலிங்கத்தைக் குறிக்கும். இலிங்கம் என்பது குறி எனப் பொருள்படும். சிவலிங்கம் என்பது சிவத்தின் அடையாளம் என்ற பொருளைத் தரும். சிவலிங்கம் ஆண் பெண் என்ற இரு உருவங்களில் ஒன்றாக நாம் கருதமுடியாது. ஆகவே அது அருவம். அதே நேரத்தில் சிவலிங்கம் என்பது கண்ணால் பார்க்கக்கூடிய வடிவம் உடையது.

அருவமும் உருவமும் கலந்து இருப்பதால் இது அருவுருவம் என்பதற்கு வடிவாக உள்ளது. சிவபிரான் உருவம் அருவம் அருவுருவம் என்ற மூன்று தன்மைகளைம் கடந்தது. ஞானம் என்பது தான் சிவபிரானின் உண்மையான வடிவம். இவ்விடத்தில் இஸ்லாம் கிறித்தவம் போன்ற சமயங்கள் இறைவன் அருவமானவர் என்று கூறுவது இறைவனின் உண்மையான இயல்பைக் குறிப்பதாக கருத இயலாது அருவம் என்பது உருவத்திற்கு எதிர்மறை. அருவம் உருவம் என்ற இருமையைக் கடந்தால் தான் உண்மையை உணரமுடியும். அருவம் உருவம் என்ற இரண்டும் சிவபிரானின் உண்மை வடிவைக் காட்டமுடியாது என்பது போல் அருவுருவம் என்ற தன்மையைக் கடந்து இறைவன் இருக்கின்றார் என்பதே சைவசித்தாந்தம் கூறும் தத்தும். திரு வருட்பயன் பாடலின் பின்னணியில் சிவபிரான் விநாயகர் இருவரும் கொள்ளும் தன்மையை நாம் உணரலாம். ஞானம் அல்லது அறிவுதான் இறைவனது உண்மை வடிவு. அவ்வகையில் சிவபிரான் விநாயகர் ஆகிய இருவர் வடிவமும் ஞானமே. ஞானம் என்ற வகையில் இருவர் வடிவமும் ஒன்றே. ஆன்மீக உண்மைகள் நம் உடலில் இதயம் போன்ற பெண்மையான அதே நேரத்தில் மிகவும் வேண்டப்படும் உறுப்பு. இதயம் ஒழுங்காக நம்உடலில் வேலை செய்யவேண்டுமானால் இதயம் மட்டும் தனியாக இருக்க இயலாது. இதயம் தசை நரம்பு போன்றவைகளால் காக்கப்பட வேண்டும். இவற்றால் பாதுகாக்கப்படும் போது தான் இதயம் ஒழுங்காக இருக்கவும் பணிபுரியவும் இயலும் அதேபோல ஆன்மீக உண்மைகளை அவற்றின் உண்மையான தன்மையில் அனைத்து மக்களும் புரிந்துகொள்ள இயலாது. அப்படிப்பட்ட ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்குத் தான் சைவத்தில் புராணச் செய்திகள் கொடுக்கப்படுகின்றன. இதயம் போன்ற நுண்மையான ஆன்மீக உண்மைகளைப் புரிந்து கொள்வதற்கு வாயிலாக (அதாவது முன்பு கூறப்படும் செய்திகளாக) புராணச் செய்திகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மெய்கண்டார் அருளிய சிவஞான போதத்தில் வரும் மங்கலவாழ்த்து பின்வருவது

*கல்லால் நிழல்மலை*
*வில்லார் அருளிய*
*பொல்லார் இணைமலர்*
*நல்லார் புனைவரே*

இப்பாட்டின் கருத்து கல்லாலமர நிழலில் எழுந்தருளியிருக்கும் சிவபிரான் அருள்வதற்காக சைவ சித்தாந்த உண்மைகளைக் கேட்டு சிந்தித்து தெளிந்து உண்மையை முழுமையாக உணர்ந்த நல்லோர் பொல்லாப் பிள்ளையாரின் திருவடிகளை வணங்குவர். இச்செய்யுளை இரண்டு நிலைகளில் புரிந்து கொள்ள வேண்டும் என்று சிவஞான முனிவர் கூறுகின்றார். உலகியல் நிலையில் விநாயகர் சிவபிரானின் மகன். ஆகவே மகனுக்கு செய்யும் வழிபாடு தந்தைக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஆனால் இந்நிலையோடு மட்டும் நாம் அமைதி அடைந்துவிடக்கூடாது. இறைவன் ஞானமே வடிவானவன். இந்த உண்மையை முழுமையாக உணர்ந்து கொள்வதில் நாம் சோர்ந்து போகக் கூடாது. ஞானம் என்ற வகையில் சிவபிரானும் விநாயகரும் வேறல்லர். ஆகவே ஆன்மீக நிலையில் ஒருவர் இருக்கும் நிலையைப் பொறுத்து சிவபிரானும் விநாயகரும் ஒருவரா அல்லது இருவரா என்பதைப் புரிந்துகொள்ள இயலும்.



அர்த்தநாரீஸ்வரர்


# RADHA SAREES



EXCLUSIVE & ELEGANT
IN
*WEDDING SAREES, WEDDING LANGHAS*
*BANARAS SILK SAREES, CHOLI SUITS*
*JAPANESE SAREES, SALVAR KHAMIZ*
*JEWELLERY*

எங்களிடம்
திருமணத்திற்கான பட்டுப்புடைவைகள்
பனாரஸ் பட்டுப்புடைவைகள்
யப்பான் புடைவைகள், சல்வார் கமிசுகள்
மற்றும் தங்க நகைகள் யாவும்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

ராதா சாறீஸ்

**279 GREEN STREET**
**FOREST GATE**
**LONDON E7 LJ**
**TEL/FAX**
**0181 472 2369**

# ஐயம் தீர்க்கும் அறிவுரைகள்

-சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள்

**சக்தி இல்லாமற் சிவன் கோயில்கள் எதையுமே காணமுடியாது. ஆனால் சிவன் இன்றிச் சக்திக்கு மட்டும் கோயில்கள் உள்ளனவே. இதன் விளக்கம் என்ன?**

சிவன் கோயில்களிலே பொதுவாகச் சிவனுக்குப் பார்வதி என்ற பெயரிலே சக்தி இருக்கும். ஆனால் ஒவ்வொரு ஊர்களிலும் இந்தச் சக்திக்கு வேறு வேறு பெயர்கள் இருக்கும். மதுரையில் மீனாக்ஷி. சிதம்பரத்தில் சிவகாமசுந்தரி. காஞ்சியில் காமாக்ஷி என்று உண்டு. ஆனால் எல்லா சக்திகளுமே பார்வதியினுடைய அம்சமே. சிவனுடைய பத்தினி என்கிற நிலையில் அந்த சக்தி இருக்கும்போது எல்லா இடங்களிலும் சிவன் இருக்கும்போது சக்தியும் இருக்கும். அம்பாளுடைய கோயில்களிலே சிவன் இல்லையே என்று கேட்கின்றீர்கள். எந்தமாதிரிக் கோயிலிலே இல்லை? துர்க்கை அம்மன் கோயில். மாரியம்மன் கோயில் போன்ற கோயில்களிலேதான் சிவன் இல்லை. மதுரை மீனாக்ஷி அம்பாள் கோயிலிலே சோமசுந்தரர் இருக்கிறாரே. சக்தியினுடைய அம்சம் நான்கு பிரிவாக உள்ளது. வடமொழியில் போகே பவானி, புருஷேஷு விஷ்ணுº, கோபேஷு காளி, சமரேஷு துர்க்கா என்று ஸ்லோகம் உள்ளது. சிவனோடு பத்தினி ரூபத்தில் இருக்கும்போது பவானி, பார்வதி, தாக்ஷாயணி என்று பல பெயர்கள். அதே சக்தி புருஷ ரூபமாக இருக்கும்போது விஷ்ணு என்று பெயர். கோபமாக அதே சக்தி அதர்மங்களைக் கண்டிக்கும்போது காளி என்று பெயர்பெறும். அதர்மங்களையும் அசுரர்களையும் அழித்து அருளும்பொழுது துர்க்கை என்ற பெயர் பெறுகிறது. இந்த நாலு நிலைகளில் முதலிலுள்ள தர்மபத்தினி வடிவந்தான் நாம் கோயில்களிலே சிவனுடன் பார்க்கும் சக்தி. ஆனால் அதே சக்தி காளியாக மாறும்போது சிவனுடைய பத்தினி ஸ்தானம் என்று இல்லை. அப்போது அது சுதந்திரமான சக்தி. அதுபோல துர்க்கை என்ற ஸ்தானம் வகிக்கும்பொழுதும் பத்தினி ஸ்தானம் கிடையாது. காளியையும் துர்கையையும் சுதந்திர சக்தி என்று சொல்வார்கள். சிவனைக் காலிலே போட்டு மிதிக்கும் காளி படத்தைப் பார்த்திருப்பீர்கள். காளிக்குச் சிவன் என்று கிடையாது. சாக்த மதத்தவர்கள் சிவனைக் கடவுள் என்றே ஒப்புக்கொள்ள மாட்டார்கள். சக்தி சிவனுக்குக் கட்டுப்பட்டதல்ல என்பார்கள். ஆகவே சக்தி சுதந்திரமாக விளங்கும் இடத்திலே சிவனைக் காண முடியாது.

**அம்பாளுக்கு எலுமிச்சம்பழ மாலையும் ஆஞ்சனேயருக்கு வடை மாலையும் சாத்தி வணங்குகிறோம். இன்னின்ன தெய்வத்துக்கு இன்னின்ன மாலை அணிவிக்கவேண்டும் என்று நியதி உண்டா? ஏன் இப்படி மாலைகள் போட்டு வழிபடுகிறோம்?**

பொதுவாக மாலைகள் அணிவது வாசனை சம்பந்தமாக. புஷ்பத்தினுடைய நல்ல மணத்துக்காக. வாயு சம்பந்தமான இறை உபசாரங்களில் இதுவும் ஒன்று. உபசாரங்களிற் பஞ்ச பூத சம்பந்தங்கள் இருக்கவேண்டும் என்று முன்னர் சொல்லியிருந்தேன். ஆக அலங்காரத்துக்காகவும் அர்ச்சிப்பதற்காகவும் மாலைகள் சாத்துகிறோம். பெரும்பாலும் மலர்களைத்தான் மாலையாகக் கட்டிப் போடுவோம். வில்வம் துளசி அறுகு போன்ற பத்திரங்களையும் மாலையாகக் கட்டிப் போடுவதுண்டு. விநாயகருக்கு அறுகு, சிவனுக்கு வில்வம். விஷ்ணுவுக்குத் துளசி என்றும் முறைகள் உண்டு. அதே வேளை சில தெய்வங்களுக்கு வித்தியாசமாக மாலைகள் சாத்துகிறோம். ஆஞ்சனேயருக்கும் பைரவருக்கும் வடைமாலை சாத்துகிறோம். துர்க்கைக்கு எலுமிச்சம்பழ மாலை போடுகிறோம். பிரார்த்தனை ரூபமாகச் சில வழிபாடுகள் செய்யும்போது இப்படி வருகிறது. ஆஞ்சனேயருக்கு வடைமாலை மட்டுமின்றி வாழைப்பழ மாலை, பழ மாலை, வெற்றிலை மாலை என்றெல்லாம் போடுவார்கள். ஆஞ்சனேயர், பைரவர் எல்லாம் யோகரூபர்கள். யோக மூர்த்திகள் சலனம் இல்லாமல் தவ நிலையில் இருப்பவர்கள். ஆஞ்சனேயர் ராமநாமத்தையே செபிப்பவர். பைரவர் சர்வ சங்காரத்தை நினைத்து

அடக்கியிருக்கிற தெய்வம். இப்படித் தெய்வங்களுக்கு நைவேத்தியமாகப் படைப்பதைவிட அர்ப்பணமாக மாலை அணிவிக்கும் பழக்கம் உண்டு. எலுமிச்சை மாலை அணிவிப்பதும் எலுமிச்சை தீபம் ஏற்றுவதும் இப்போ நிறைய வழக்கத்தில் உண்டு. பழவகைகளில் எலுமிச்சம்பழம் அற்புதமானது. ஓர் அரசனையோ அல்லது பெரிய மனிதரையோ கண்டால் எலுமிச்சம்பழம் கொடுக்கும் வழக்கம் இருந்தது. இப்போதும் சில இடங்களில் இந்த வழக்கம் உண்டு. எலுமிச்சம்பழத்தை நட்புக்கு அறிகுறியாகச் சொல்வார்கள். ஏனெனில் மற்றைய எந்தப் பழத்தை எடுத்தாலும் அவை பிஞ்சிலே ஒரு சுவை, காயிலே ஒரு சுவை, பழத்திலே ஒரு சுவை. மாங்காய் பழமானதும் நல்ல இனிப்பாக இருக்கும். அதையே காயாகச் சாப்பிட்டால் மிகவும் புளிக்கும். எலுமிச்சம் பழம் பிஞ்சாக இருந்தாலும் காயாக இருந்தாலும் பழமாக இருந்தாலும் அதன் சுவை ஒரேமாதிரித்தான் இருக்கும். சுவை மாறாமல் இருக்கும் ஒரே பழம் அது. நட்புக்கூட மாறாமல் இருக்கவேண்டும் என்பதற்காகவே எலுமிச்சம் பழம் கொடுப்பார்கள். கஷ்டத்திலும் நஷ்டத்திலும் சுகத்திலும் ஒரே சீராக நட்பு இருக்கவேண்டும் என்று நினைவுறுத்த எலுமிச்சம்பழம் கொடுக்கப்படுகிறது.

"ரஜனி ராஜவஸிம்ஸியாது" என்று வடமொழியில் சொல்லப்பட்டிருக்கிறது. எலுமிச்சம் பழத்துக்கு ஓர் ஆகர்ண சக்தி உண்டு. நாம் யாரிடம் எலுமிச்சம்பழத்தைக் கொடுத்தாலும் அவர்கள் நம்வசப்படக்கூடிய சக்தி இருக்கும் என்று சொல்வதுண்டு. எலுமிச்சம்பழ சாற்றுக்கு நமது உடம்பிலே உள்ள இரத்தத்துக்குச் சமமான சக்தி இருக்கிறது என்பார்கள். சுண்ணாம்போடு எலுமிச்சம் பழத்தைக் கலந்தால் சிவந்துவிடும். உடம்பிலே உள்ள கல்சியம் நமது இரத்தம் சிவப்பாக இருப்பதற்குத் தேவை என்கிறார்கள். அதனால் எலுமிச்சம் பழத்தையும் இரத்தத்தையும் ஒப்பிடலாம். இனி அந்தக் காலத்திலே பலி கொடுக்கும் வழக்கம் இருந்திருக்கிறது. பலி கொடுக்கும் இடத்தில் அதற்குப் பதிலாக இப்போ எலுமிச்சம் பழத்தை வெட்டுகிறார்கள். ஆகவே தேவிக்கு நமது இருதயத்தையே அர்ப்பணம் பண்ணுகிறோம் என்ற பாவனையில் எலுமிச்சையை உபயோகிக்கிறோம். ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி என்பதற்கமைய ஊனுக்குப் பதிலாக எலுமிச்சம்பழத்தில் விளக்கு ஏற்றி வழிபடுகிறோம். இதற்கு வேறு ஆகம சம்பந்தமான விளக்கம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

***பொருள் வேண்டும், நல்ல தாரம் அமையவேண்டும், பிள்ளைகள் நன்றாகப் படிக்க வேண்டும் என்று வேண்டி அபிஷேகம் செய்கிறேன், தேங்காய் உடைக்கிறேன் என்று கடவுளை வேண்டுவது சரியா?***

கோயில் வழிபாட்டின் அவசியம் இப்போது குறைந்துகொண்டு வருகிறது. கோயிலுக்குள் நுழையும்போதே என்ன இலாபம் வருமென்றுதான் சிலர் நினைக்கிறார்கள். உண்மையில் தன்னால் இயலாத நிலை வரும்பொழுதுதான் பலர் கோயிலுக்குப் போகிறார்கள். இயலாமையை ஒத்துக்கொள்ளும்போது அவர்களுக்கு நம்பிக்கை குறைகிறது என்றுதான் அர்த்தம். மனிதப் பிறப்பின் தேவைகளை மனிதனேதான் நிறைவுசெய்யவேண்டும். அந்த நிறைவு செய்வதற்கான சக்தியைக் கொடுப்பதுதான் ஆண்டவன். சக்தியைத்தான் நாம் வேண்டவேண்டும். அது வேண்டும், இது வேண்டும் என்றெல்லாம் கேட்பார்கள். தனம் தரும், கல்விதரும் என்று பாடிய அபிராமிப் பட்டர் கடைசியில் நல்லன எல்லாம் தரும் என்று பாடினார். அதாவது ஆண்டவன் தானாக உனக்குக் கொடுப்பார். கொடுப்பார் என்றால், உனக்கு எப்படி வந்து சேரவேண்டுமோ அப்படி வந்து சேரும். அதனால் நீ கேட்கிறதைவிட சும்மா வழிபட்டாலே போதும். இறைவனைக் கேட்பதைவிடக் கேளாமலே இருப்பது நல்லது. உதாரணமாக எறும்பினுடைய கதை சொல்கிறேன்.

எறும்பு ஒரு காலத்திலே எருமைமாடு மாதிரிப் பெரிய மிருகமாக இருந்ததாம். அது ஒருநாள் பாம்பு ஒன்றைக் கண்டது. பாம்பு ஒருத்தனைக் கடித்தபோது அவன் இறந்துவிட்டான். எறும்பு கடித்துப் பார்த்தது. யாரும் சாகவில்லை. நான் கடித்து யாராவது சாகவேண்டும் என்று எறும்பு விரும்பியது. பாம்பைக் கண்டு எல்லோரும் பயந்து ஓடுவதுபோல என்னைக் கண்டும் எல்லோரும் ஓடுவார்கள் என்று எறும்ப நினைத்தது. உடனே இறைவனை நோக்கித் தவம் செய்தது. நான் கடித்து எதிரி சாகவேண்டும் என்பதுதான் எறும்பின் நோக்கம்.


கடவுள் எறும்புக்குக் காட்சிகொடுத்து என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். மனதிலே நல்ல நோக்கம் இல்லாததாலும் இறைவனைக் கண்ட சந்தோஷத்திலும் நான் கடித்து அவன் சாகவேண்டும் என்று கேட்காமல் நான் கடித்து நான் சாகவேண்டும் என்று வரம் கேட்டது. கடவுளும் தந்தேன் என்றுவிட்டார். எருமைமாடு மாதிரி இருந்த எறும்பு சிறியதாகிவிட்டது. போய்க் கடித்தபோது கடிபட்டவன் கையால் அடித்த அடியில் எறும்பு நசுங்கி இறந்தது. இப்படி விபரீதமாக வரம் வாங்குவதை விட நல்லதெல்லாம் கொடு என்று கேட்பதே நல்லது. வேண்டத் தக்கது அறிபவன் ஆண்டவன்.




# அருள் விருந்து

உயிரை உறுதிப்படுத்துவது அறிவின் திறன்.
மாறுபடும் உலகில் என்றும் மாறாது இருப்பவர் கடவுள்.
முகஸ்துதி சொல்பவனும் கேட்பவனும் கெட்டவர்கள்.
மரணத்தை வெல்வதாவது அதனை மகிழ்வுடன் ஏற்றலேயாம்
உடல் பழுதுபட்டாலும் உள்ளம் தெளிவாதல் வெண்டும்.
பெருநெறி பிடித்தவனை நோய்கள் தீண்டுவதில்லை
புல்லிய எண்ணங்கள் மனக்குழப்பம் தருகின்றன.
சீலங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது பொறுமை.
உளதும் இலதும் பொருளின் இருவித தோற்றங்கள்
நாம் பாடுபட்டுத் தேடியதே நமது பொருளாகும்.
இகழ்ச்சியிலும் பார்க்க புகழ்ச்சி கொடியதாகும்.
மனத்தூய்மை பெற்றவர் கடவுளைக் காணவல்லவர்.
மேலானது ஒன்றை யாரும் என்றும் அழிக்கமுடியாது
மக்களுள் ஒற்றுமையை உண்டாக்குவது நன்நெறி.
தியானத்தால் கடவுளைக் காணும் ஞானக்கண் உண்டாகிறது.
ஆசையை வென்றவனே நிறைந்த செல்வம் உடையவன்.
முயற்சிக்கேற்றவாறு மனிதன் முன்னேற்றமடைகின்றான்.
கீழ்ப்படியத் தெரிந்தவனே ஆளவல்லவனாகிறான்.
வினைப்பயன் வாழ்வைப் பின்பற்றி வருகிறது.
தாய்மொழியை இழப்பவர் தம்மையே இழப்பார்கள்.
நல்ல செயலுக்கு இயற்கை இடம் தருகின்றது.
சான்றோன் எல்லார்க்கும் நடுநிலையில் இருக்கின்றான்.
வாழ்க்கைப் பாதைக்கு நல்லறிவே கைவிளக்கு.
தூய அன்புள்ள இடத்தில் அச்சம் இல்லை.
அனைத்தையும் தன்னகத்தில் அணைத்துக் கொள்வது அன்பு.

தொகுப்பு : ராணி




# சிறுவர் கலசம்

The following pages contain features and articles for children and by children. Hence are placed in the middle of the magazine Children can remove those pages and save them and eventually bind them in the form of a booklet. It is our desire to increase the number of pages in children section from eight to twelve. This depends on the enthusiasm the children show.In this special issue we have increased the number of pages to twelve. We wish to know the views of children and parents on this matter.

Editor

# பாம்பும் சன்யாசியும்.

ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருந்த ஒரு புதரில் இருந்த புற்றில் ஒரு பாம்பு வசித்து வந்தது. அந்தப் புதரைக் கடந்துதான் விவசாயிகளுக்கும் மற்றவர்கட்கும் தங்கள் நிலங்களுக்குப் போக வேண்டும். புற்றிலிருக்கும் பாம்பு அடிக்கடி வெளியே வந்து அவ்வழியாகச் செல்பவரைக் கடித்துத் துன்புறுத்தி வந்தது. இதன் காரணமாக ஒருவரும் அந்த வழியாகச் செல்வதில்லை.



ஒரு நாள் ஒரு சன்யாசி அவ்வழியாகச் செல்லலானார். அப்பொழுது சில ஆடு மேய்க்கும் சிறுவர்கள் அவரிடம் வந்து சுவாமி அந்தப் பக்கமாகப் போகாதீர்கள். அந்தப் புதரில் உள்ள புற்றில் ஒரு நல்ல பாம்பு இருக்கின்றது. இவ்வழியாக யார் போனாலும் உடனடியாகப் புதரை விட்டு வெளியே வந்து அவர்களைக் கடித்து விடுகின்றது என்றனர்.

சன்யாசி அதைப் பொருட்படுத்தாமல் புதரின் அருகே சென்றார். ஆள் அரவத்தைக் கேட்டதும் பாம்பு புற்றிலிருந்து வெளியே வந்து சன்யாசியைக் கடிக்க முயன்றது. உடனே சன்யாசி பாம்பே நீ என்னைக் கடித்தால் உனக்கு ஏதாவது பயன் உண்டா? என்று கேட்டார்.

"இல்லை" என்றது பாம்பு.

"நான் உன் விரோதியும் இல்லை, என்னைக் கடிப்பதால் உனக்கு எந்த நன்மையும் இல்லை. அவ்வாறு இருக்கும் போது எதற்காக என்னை நீ கடிக்க விரும்புகின்றாய்" என்றார் சன்யாசி.

"அது என் சுபாவம்" என்றது பாம்பு.

"அதை மாற்றிக் கொள். பெயருக்குத் தகுந்த மாதிரி நல்ல பாம்பாக இரு" என்று கூறிய சன்யாசி

"பாம்பே உனக்கு நானொரு மந்திரத்தை உபதேசம் செய்கின்றேன். அதை விடாமல் ஜபித்து வந்தால் உனக்குக் கடவுள்மீது பக்தி ஏற்படும். முடிவில் கடவுள் உன் முன்னால் தரிசனம் தருவார்" என்று ஒரு மந்திரத்தை அதற்கு உபதேசம் செய்தார்.

பாம்பு அன்றிலிருந்து சன்யாசி சொன்ன மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு புற்றுக்கும் செல்லாமல் பாதையிலே கிடந்தது. பாம்பு புற்றைவிட்டு வெளியே வந்து பாதையில் கிடப்பதைச் சிலர் கண்டனர். பயந்து பயந்து ஓரமாகச் சென்றனர். பாம்பு அவர்களை ஒன்றும் செய்யவில்லை. பிறகு மெள்ள தைரியமாக அவ்வழியே செல்லலாயினர். ஆனால் சிறுவர்கள் சும்மா இருக்கவில்லை. அதன்மேல் கல்லை விட்டு எறிந்தனர். சில சிறுவர்கள் தன் வாலைப் பிடித்து இழுத்து தூர எறிந்தனர்.

பாம்போ கடவுள் தரிசனதிற்காக சன்யாசி உபதேசித்த மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு ஒருவரையும் கடிக்காமல் இருந்து வந்தது.

சிறுவர்களின் துன்புறுத்தல் காரணமாக பாம்பு ரத்தக்காயம் ரணகாயமாகப் பாதையோரத்தில் புழு போல் நெளிந்து கொண்டிருந்தது. அப்பொழுது மீண்டும் அந்த சன்யாசி அவ்வழியாக வந்தார். பாம்பின் நிலையைக் கண்டு பரிதாபப்பட்டு பாம்பே உனக்கு ஏன் இந்தக் கதி ஏற்பட்டது என்று கேட்டார்.

சுவாமி உங்கள் சொற்படி நான் எவரையும் கடிக்காமல் கடவுள் நாமாவைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நான் கடிக்க வரும்போது என்னைக் கண்டு காததூரம் ஓடியவர்கள் நான் கடிக்க மாட்டேன் என்று தெரிந்ததும் என்னை இம்சிக்கிறார்கள்" என்று கூறியது.

"பாம்பே, நான் உன்னிடம் என்ன சொன்னேன், அனாவசியமாக ஒருவரையும் கடிக்காதே என்றுதானே சொன்னேன்? உன்னைத் துன்புறுத்த வருகிறவர்களைச் சீறிப் பயமுறுத்த உன்னால் முடியாதா? அவ்வாறு செய்ய வேண்டாமென்று நான் உன்னிடம் சொல்லவில்லையே! இனியாராவது உன்னைத் துன்புறுத்த வந்தால் சீறிப் படம் எடுத்து அவர்களைப் பயமுறுத்து" என்றார் சன்னியாசி.

பாம்பும் சன்யாசி கூறியவாறு தன்னைத் துன்புறுத்த வருகிறவர்களைப் பார்த்துச் சீறிப் படமெடுத்ததும் பழைய சுபாவம் இதற்கு வந்து விட்டது என்று நினைத்தவர்களாய் மக்கள் அலறி அடித்துக் கொண்டு ஓடலாயினர்.

# ILAYANKUDI MARA NAYANAR

Ilayankudi Mara Nayanar was a farmer. Maranar was his name: he lived in a village called Ilayankudi. He was a great devotee of Lord Siva and his Devotees. He took the greatest pleasure in serving them. This Shadana was known as Maaheswara puja ( or worship of the devotees of Maheswara or Lord Siva). It is described as follows:

' On seeing a devotee of Lord Siva, with the external marks of Vibhuthi, Rudraksham, etc., taking him as Lord Siva himself, welcoming him, prostrating before him, washing his hands and feet, drinking the water (Charanamrith), giving him a seat, worshipping him with flowers, Doopa, Deepa, Naivedya, pleasing him with sweet words, thanking the Lord for the opportunity and accompanying the guest for some distance while sending him away - these constitute Maheswara puja. This is also included in Chariyai ( one of the main Saivite disciplines).'

Offering food to the Lord's devotees had purified his heart and made him a fit receptacle for the grace of God. As Thiruvalluvar has said in the Kural:

*Fortune dwells with a delighted heart in the house of the man who honours his guest with a pleasant countenance.*

Nayanar had been blessed with all the wealth of the world. But, he considered that the wealth belonged to the Lord, to be utilised for the benefit of His devotees.

Lord Siva was highly pleased with the Nayanar's devotion. He wanted to show to the world that His Devotee would be undaunted by the worst calamity and would remain in his unshaken virtue. Nayanar's wealth melted away. His wealth had left him, but not his virtue. On the contrary, his devotion to the Lord and His devotees grew more and more intense.


Nayanar sold all his property and had to sell even himself in order to be able to serve the devotees of the Lord.

One day it was raining heavily. Nayanar and his wife were starving. No one came forward to help them. Finally, he bolted the door and was about to fall asleep. Just then he heard a knock at the door, and, on opening it, found a Siva Baktha standing in front of the house, drenched with rain. Nayanar at once took the guest inside, dried his body and gave him fresh clothes to wear. ' Rest awhile, Swami, while we prepare some food for you to appease your hunger,' said Nayanar and told his wife of his predicament: there was nothing to offer the devotee of the Lord. But, the devout wife suggested that Nayanar could go into the backyard and collect the grain- seeds that they had sown that very day. Nayanar accepted the suggestion. On account of the heavy rain, the grains were floating and it was easy to collect them in a basket. As soon as he brought the grains, the wife fried and crushed them, and with the help of some greens that grew in their own backyard, cooked a nice dinner for the guest. Nayanar was supremely happy. And, as he went to awaken the guest, he discovered that He has disappeared. At the same time, Nayanar saw in the sky, Lord Siva Who had come in the form of the devotee and Mother Parvathy showering Their blessing on him and his wife. The Lord said, 'Oh noble souls, I am highly pleased with your devotion. You will soon attain My Abode and live there for ever.'

# SRI RAMAKRISHNAR


Sri Ramakrishna Parahamsa , the Messiah of undivided Bengal, the Prophet of Dakshineshwar, was both a phenomenon and an institution. His life and work, so mysterious and so sublime has been a landmark of the last century. During his life time his fame was confined to Bengal alone, but later he became a welknown spritual giant throughout the wide world. His brilliant and extraordinary disciples and monks spread his teachings and message to all corners of the globe. The message of Ramakrishna is as relevant today as it has ever been in the past. If it is practised and preached sincerely most of our present day evils and problems would disappear automatically. This biographical tract is more or less a compilation. I hope it would inspire the youngsters to go for the Master's detailed biographies which are a great source of spritual pleasure, enlightenment and profit.

News reached Chandra his mother that her beloved Gadai had become mad at Dakshineswar. The Anxious mother asked him to come to Kamarpukur and spend days there.





Ramakrishna accordingly went there but his behaviour shocked her and the villagers. But Sri Ramakrishna was not concerned about what others were thinking of him.

Sometimes he used to go to the village cremation ground and meditate there quietly . Sri Ramakrishna was now twenty three years of age. Chandra devi succeeded in arranging a marriage for Sri Ramakrishna. He did not raise any objection.



On the contrary he told his mother that his bride had already been marked with a straw. A five year old Saradamani of Jairambati was the bride chosen. Every one rejected at the marriage


After the marriage he stayed in the village for a year and then returned to Dakshineswar. Sri Ramakrishna plunged once again into severe spiritual practices. As if sent by God many spiritual teachers came to him one. First came Bhairavi Brahman!.
My child, I have been searching for you so long. Mother said that I am to teach you the way to realize God as it is laid down in the tantras
The Tantrik way to think of God as the universal mother. Mother has different forms such as Kali, Tara, Durga and Saraswathy. Bhairavi taught Sri Ramakrishna all the ways one after another.
Not only that, Bhairavi from her spiritual insight understood that Sri Ramakrishna was none other than God. She declared that God had come down in the form of Sri Ramakrishna to teach mankind.

# ESSENTIAL ETHICS OF THE TAMILS

## ULAGA NEETHI

(உலக நீதி)

## Universal words of wisdom

### Tamil Text : Verse No 9

மண்நின்று மண்ஓரம் சொல்லவேண்டாம்
மனம் சலித்துச் சிலிக்கிட்டுத் திரியவேண்டாம்
கண்அழிவு செய்து துயர் காட்டவேண்டாம்
காணாத வார்த்தையைக் கட்டுரைக்க வேண்டாம்
புண்படவே வார்த்தைகளைச் சொல்லவேண்டாம்
புறம் சொல்லித் திரிவாரோடு இணங்கவேண்டாம்
மண்அளந்தான் தங்கை உமை மைந்தன் எங்கோன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே!

### *Transliteration*:

Mann Ninru Mann Oatam Solla Vendaam
Mann Saliththu Silikkiddu - th - Thitrya Veindam
Kann Azlivu Seithu Thayar Kadda Vendaam
Kannaatha Vaarththaiyai Kaddutaikka Vendaam
Punn Padavei Vaarthaikalai Solla Veiandaam
Puram Solli Thitivāatoadu Inanka Veindaam.
Mann Alanthaan Thankai Umai Mainthan Enkoan
Mayileirum Putumaalai Vaazhththaay Nenchay

### *Explanation - Translation*

In land disputes don't adjudicate with prejudice or prediction. On account of your frustration, don't pick up quarrels with others. Don't shed tears so as to severe your worries. Don't fabricate secnes where you have not seen. Don't speak out words which are taunting and painful. Don't associate with people who backbite. Oh you heart! Praise of the peacock rider the son of Umai who is the sister of Lord Krishna who measured the whole universe.

### Tamil Text : Verse No 10

மறம் பேசித் திரிவாரோடு இணங்கவேண்டாம்
வாதாடி வழக்கழிவு சொல்ல வேண்டாம்
திறம் பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்
தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்
ஏசலிட்ட உற்றாரை நத்த வேண்டாம்
குறம் பேசி வாழுகின்ற வள்ளிபங்கன்
குமரவேள் நாமத்தைக் கூறாய் நெஞ்சே!

### *Transliteration*

Maram Peisai - th - Thitivaatoadu Inanga Veindaam.
Vaathaadi Vazhakkazhiva Seiyya Veindaam
Thiram Peisi Kalakam Iddu - th - Thitiya Veindaam
Theivaththai Otu Naalum Marakka Veindaam.
Iranthaalum Poi Thaannai Solla Veindaam
Eeisalidda Uttraatai Naththa Veindaam
Kuram Peisi Vaazhkinra Valli Pankan
Kumaraverl Naamaththai Kooraay Nenchey.

### *Explanation - Translation*

Don't familiarize with those people who are strong and invincible. Don't enter into dispute give untruthful evidence.
Don't boast and create rowdy scenes.
Forget not that God is great.
Even in the event of death don't lie. Don't approach relatives who reproach you.
Oh you heart! Sing the praise of Kumaravel the partner of Valli who leads the life of gypsy.

**S. SRIKANDARAJAH**

# நீங்களும் பாடலாம்

இராகம் : கானடா தாளம் : திஸ்ரம்

சைவர்களே சைவர்களே ஒன்று சேருவீர்
சைவசமய சித்தாந்தம் அறிந்து கொள்ளுவீர்

திருஞான சம்பந்தரும் நாவுக்கரசரும்
சுந்த்ரரும் மாணிக்கவாசக னாரும்
சைவத்தை வளர்க்கவந்த அடியரல்லவா
சைவசமய குரவரெனும் நால்வரல்லவா –சைவர்களே

ஆதியிலே தோன்றியது சைவ மல்லவா
சோதிமய மாகுவது சைவ மல்லவா
வேத நான்கும்விளக்குவது சைவ மல்லலா
நாத நாமம் நமச்சிவாய வென்ப தல்லவா –சைவர்களே

மெய்ச்சமயம் சைவமென்றார் தாயுமானவர்
பொய்ச்சமயம் விடுகவென்றார் இராம லிங்கரே
மெய்ச்சமயம் சைவமென்று அறிந்துகொள் வீரே
நாதநாமம் நமச்சிவாய வென்ப தல்லவா –சைவர்களே

அன்பே சிவம் என்றே நாம் அறிந்திடு வோமே
துன்பநீங்கி ஓடுமென்று தெளிந்திடு வொமே
அன்றும் இன்றும் என்றும் வாழ்வர் சைவ ரல்லவா
மன்று லாவும் சிவபெருமான் தலைவரல்லவா –சைவர்களே

பாடல் : புலவர் பா. ஆழ்வார்




TO BE CONTINUED

# வாழிய லக்கண லக்கிய மரபு.

- க. உமாமகேஸ்வரன்

ஈழத்தில் வாழ்ந்த பேரறிஞர்களிற் சுன்னாகம் குமாரசாமிப் புலவரும் ஒருவர். அவர் எழுதிய நூல்களில் ஒன்று இராமோதந்தம். இராமாயணத்தைச் சுருக்கமாக அழகிய தமிழிலே எழுதியிருந்தார். அந்த நூலை நிறைவுசெய்யும் வாழ்த்துப் பாவில் "வாழிய லக்கண லக்கிய மரபு" என்று ஈற்றடி அமைத்திருந்தார். எங்கே எதிர்காலத்தில் தமிழ் இலக்கணமும் இலக்கியமும் தேய்ந்துவிடுமோ எனப் பயந்துதான் புலவர் அப்படிப் பாடினாரோ என்று எண்ணத் தோன்றியதால் அதையே தலைப்பாகக் கொடுத்துள்ளோம்.

தமிழ்ச் சொற்களில் லகரம் முதலில் வராது. ஆனால் புலவர்களுக்குப் பாட்டின் சந்தத்திற்கு ஏற்ப சொற்களை முதலிலோ இறுதியிலோ குறைக்கும் அதிகாரம் உண்டு. அந்த வகையிற் புலவர் பாடிய வரி அப்படியே இக்கட்டுரையின் தலைப்பாகின்றது.

| | 1 | 2 | 3 |
|---|---|---|---|
| 1 | க் | + அ = | க |
| 2 | ங் | + அ = | ங |
| 3 | ச் | + அ = | ச |
| 4 | ஞ் | + அ = | ஞ |
| 5 | ட் | + அ = | ட |
| 6 | ண் | + அ = | ண |
| 7 | த் | + அ = | த |
| 8 | ந் | + அ = | ந |
| 9 | ப் | + அ = | ப |
| 10 | ம் | + அ = | ம |
| 11 | ய் | + அ = | ய |
| 12 | | + அ = | ர |
| 13 | ல் | + அ = | ல |
| 14 | வ் | + அ = | வ |
| 15 | ழ் | + அ = | ழ |
| 16 | ள் | + அ = | ள |
| 17 | ற் | + அ = | ற |
| 18 | ன் | + அ = | ன |

மூன்று நிரல்கள்: பதினெட்டு வரிசைகள், உள்ளே சிலவரிவடிவக் குறியீடுகள், மூன்றாவது நிரலின் பதினெட்டு வரிசைகளிலும்வரும் குறியீடுகள் நிரம்பியுள்ளன. இரண்டாவது நிரலின் பதினெட்டு வரிசைகளிலும் வரும் குறியீடுகள் ஒரே மாதிரியானவை.

முதலாவது நிரலின் பன்னிரண்டாவது வரிசைக்குரிய குறியீடு மட்டும் தரப்படவில்லை. இங்கே தரப்பட்டுள்ள குறியீடுகளின் அமைப்பையும் ஒழுங்கையும் வைத்துக்கொண்டு காணாமற் போய்விட்ட அந்தக் குறியீட்டைக் கண்டு பிடிக்க முடிகிறதா? முயன்று பாருங்கள்.

கண்டுபிடித்துவிட்டேன் என்று கூற முனைபவர் தாம் அப்படிக் கூறுவதற்கான காரணங்களை முன்வைக்கவேண்டும்.!

இந்தப் புதிரை விடுவிப்பதற்குத் தமிழோ தமிழிலக்கணமோ அறிந்திருக்க வேண்டும் என்ற அவசியமேயில்லை! மொழி இன மத பேதங்களைக் கடந்த போட்டி இது. வெறுங் குறியீடுகளாக மட்டுமே அட்டவணையில் உள்ளவற்றைக் கருத வேண்டும்.

நுழைவுக்கட்டணம் இல்லை.

பரிசு:- தமிழ் இலக்கண நுட்பம் ஒன்றை மிக எளிதாகப் புரிந்துகொள்ள வாய்த்ததால் ஏற்படும் நியாயமான மகிழ்ச்சி.

ஆறுதற் பரிசு:- விடையைக் காணமுடியாது திண்டாடுவோர்க்கான விளக்கம்

(பார்க்குக: மறுபக்கம்)

**முதற்பக்கப் புதிருக்கான விளக்கம்.**

இரண்டாவது நிரல்+அ = என்ற குறியீடுகளையே பதினெட்டு வரிசைகளிலும் கொண்டிருக்கிறது. எனவே அது பொதுவானது என வைத்துக்கொள்ளலாம். ஆனால் முதலாம் நிரலின் ஒரு வரிசையில் வரும் குறியீடு மூன்றாம் நிரலின் அதே வரிசையிலே புள்ளி ஒன்றை மட்டுமே இழந்த நிலையிற் காணப்படுகின்றது. வேறு எந்த வேறுபாட்டினையும் அந்தக் குறியீடு அடையவில்லை.

எனவே,

மூன்றாம் நிரலின் பன்னிரண்டாம் வரிசையில் வரும் ர என்ற குறியீடு முதலாம் நிரலின் பன்னிரண்டாவது வரிசையில் இடம்பிடிக்கவேண்டுமானால் புள்ளி ஒன்றை மட்டுமே பெறவேண்டும் என்பது தெளிவாகின்றது. பன்னிரண்டாம் மெய்க்கான குறியீடு ர் தான் என்பது உறுதியாகிறது.

## ர் / ா்

பதினெட்டு மெய் எழுத்துக்களிலேயே பதினேழு, அ என்ற உயிரோடு சேர்ந்து உயிர்மெய் எழுத்துக்கள் ஆவதற்காகத் தமது புள்ளிகளை மட்டுந்தான் இழக்கின்றன. வேறு உருவமாற்றம் எதனையும் எய்தவில்லை என்பதைக் கண்ட பின்பும் பன்னிரண்டாவது மெய்ம்மட்டும் ா் என்ற வடிவினது என்றும் அ என்ற உயிரோடு சேர்ந்ததும் புள்ளி இழப்பதோடு அமையாது(ா இப்படி இருக்க வேண்டியது ர இப்படி வடிவ மாற்றமும் பெறுகிறது என்றும் கூறுவோர் இருப்பார்களேயானால், அவர்களை, அப்படி நீங்கள் கூறற்கான ஆதாரங்களைத் தயை கூர்ந்து கூறுங்கள் என்று நாம் கேட்போம். பதில் தர இயலாமையால், ர் தான் பன்னிரண்டாவது மெய்யின் வரிவடிவம் என்பதற்கான ஆதாரங்களை நீங்கள் தாருங்கள் பார்க்கலாம் என எதிர்க்கேள்வி கேட்பார்களேயானால்அவர்களுக்கெனத் தரப்படும் ஆதாரபூர்வமான விளக்கம் இது.

இலக்கண நூல்களிலே எழுத்துக்களின் வரிவடிவம் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. உயிர்மெய் எழுத்துக்களின் வரிவடிவம் பற்றிப் பவணந்தி நன்னூலிலே கூறியுள்ளார்.

புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்
ஏனை உயிரோ டுருவு திரிந்தும்
உயிரள வாயதன் வடிவொழித் திருவயிற்
பெயரொடு மொற்றுமுன் னாய்வரு முயிர்மெய்

இங்கே நமக்கு வேண்டிய பகுதி:

புள்ளிவிட்டு அவ்வொடு முன்னுரு ஆகியும்.....

மெய் எழுத்தக்கள் , அ என்ற உயிரோடு சேரும்போது புள்ளியை மட்டுமே விட்டதான அதே பழைய வடிவமாகியும் என்பதே மேலே குறித்த சூத்திரப் பகுதியின் பொருள்.

இது பற்றித் தொல்காப்பியர் என்ன சொல்கிறார்? அறிந்துகொள்ளவேண்டாமா?

புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை உயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீரியல உயிர்த்த லாறே

இங்கே நமக்கு வேண்டிய பகுதி:

"புள்ளி இல்லா எல்லா மெய்யும் உருவுருவாகி அகரமோடு உயிர்த்தலும்........"

மெய் எழுத்துக்கள் புள்ளியை நீங்கிய வடிவே தமக்கு வடிவமாகி நின்ற பின் அகரத்தோடு ஒலித்தலும் என்பதே க்ஷ நூற்பாப் பகுதியின் பொருள். இங்ஙனம் தொல்காப்பியர் கூறியுள்ளதையே பவணந்தி புள்ளிவிட் டவ்வொடு முன்னுருவாகியும் என வழிமொழிந் துள்ளார் என்பது வெளிப்படை. இருவர் கருத்தும் இது விஷயத்தில் ஒன்றே!

தொல்காப்பியரும் பவணந்தியும் மெய் எழுத்து அகர உயிரோடு சேரும்போது புள்ளியை இழந்துவிடும். அதன் எஞ்சிய வடிவம் எந்த மாற்றமுமின்றி முன்னிருந்தது போலவே இருக்கும் என்றிலக்கணம் வகுத்திருப்பதைப் பார்த்தோம்.

அப்படியானால்,

அகர உயிரோடு மெய் இணைந்திருப்பதைக் குறிப்பிடும் குறியீடு ஒன்றுக்குப் புள்ளியை இடுவதன் மூலம் இணைந்த மெய்க்கான குறியீட்டைக் கண்டறிந்து விடலாம்.

ர, அகர உயிரோடு பன்னிரண்டாவது மெய் இணைந்திருப்பதை உணர்த்தும் குறியீடு இக்குறியீட்டுக்குப் புள்ளியிட்டதும் அது பன்னிரண்டாவது மெய்க்கானகுறியீடாகிவிடும். ர் தான் பன்னிரண்டாம் மெய்க்கான குறியீடு என்பது இலக்கண நூல்களின் தீர்ப்பு. இனிச் சட்டத்தரணி எவருக்கும்

மேன்முறையீடு செய்வதற்கான வாய்ப்பு இல்லையே இல்லை! இலக்கணச் சட்டம் இடம் தராது!

**எளிமைப்படுத்திய சுருக்கம்**

தொல்காப்பியமும் நன்னூலும் தமிழிலக்கண நூல்களிலே தலையாயவை. இவை அகர உயிரோடு மெய் எழுத்துக்கள் இணைந்து உயிர்மெய்கள் ஆகும்போது அடையும் வரி வடிவ மாற்றத்தைப்பற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளன.

மெய் எழுத்துக்கள் அனைத்தும் புள்ளியோடு கூடியவை. ("மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்" – தொல். எழுத்து) இவை உயிர் எழுத்துக்களிலே முதலில் வரும் அ வோடு கூடினால், புள்ளியை இழப்பது ஒன்று தவிர்ந்த வரிவடிவ மாற்றம் எதனையும் அடைவதில்லை. (உதாரணம்: த்+ அ= த) என்றிந்த இலக்கண நூல்கள் இரண்டும் உறுதியாகக் கூறுகின்றன.

பன்னிரண்டாவது மெய்யை எழுதுவது எப்படி? என்பதுதான் அறிஞர் சிலரின் இடர்ப்பாடு!


அதிஷ்டவசமாக, பன்னிரண்டாவது மெய் அகரத்தோடு கூடியிருப்பதைக் குறிப்பிடும் ர என்னும் வரி வடிவத்திலே எவருக்கும் எந்தவிதமான கருத்து முரண்பாடும் இல்லை. (பன்னிரண்டாவது) மெய்யின் புள்ளியிழந்த கோலந்தான், அம்மெய் அகர உயிரோடு இணைந்துவிட்டதென்பதற்கு அடையாளமான குறியீடாகும் என்கின்றன இலக்கண நூல்கள். அப்படியானால் பன்னிரண்டாவது மெய்யின் குறியீடு ர் என்பதன்றி வேறெதுவாகத்தான் இருக்கமுடியும்! ர் + அ = ர (புள்ளி இழப்பைத் தவிர மாற்றம் வேறெதுவும் இல்லை)

இதுவரை சுபக்கம். இனி,

**பரபக்கம்**

ா் என்ற குறியீடுதான் பன்னிரண்டாவது மெய்க்கான குறியீடு என (வெறும்) விவாதத்துக்காக வைத்துக்கொள்வோம். அப்படியானால் பன்னிரண்டாவது மெய் அகர உயிரோடு இணைந்து விட்டதுஎன்பதைக் காட்டும் குறியீடு எது? இலக்கண விதிப்படி இந்தக் குறியீட்டின் புள்ளி ஒன்றை நீக்கலாமே தவிர வேறெந்த மாற்றத்தினையும் செய்யக் கூடாது. ா் +அ = ா என்றல்லவா ஏற்பட்டுவிடும். இனி கரகம் காகம் ஆகிவிடும். காராம்பசு காாம்பசு ஆகிவிடும். சரணம் சாணம் ஆகிவிடும். அது மட்டுமா? ர என்ற குறியீடு இருப்பதற்கு எவ்வித நியாயமும் இல்லை என்றும் ஆகிவிடுமே! ஐயோ! இனி சங்கரா! ராமா! என்று தலையில் அடித்துக் கதறவும் வழியில்லையே! சங்காா, ாாமா என்றல்லவா கதறித் தொலைக்க வேண்டும்! விவாதத்துக்காக என்று ஆரம்பித்தே இத்துணை விபரீதமாகிவிட்டதே! உண்மையாகவே இந்தக் குறியீட்டைக் கொள்ள ஆரம்பித்தால்..... வேண்டாம்! " கொல்லாதீர். எம்மை விடும்!"

அச்செழுத்து வார்ப்போரால் நேர்ந்த அவலமே ா் என்ற குறியீடு. மிகச் சிறிய எழுத்துக்களாக வார்க்க நேர்ந்தபோது கீழே வரும் மடிப்பை உடைந்து போகாமல் வார்ப்பது, அப்படி வார்த்து முடித்தாலும் உடைந்து போகாதபடி அச்சகங்களிலே வைத்துக்கொள்வது என்பதெல்லாம் இயலாது போகவே ர என்ற ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு ரகர வரிசையில் வரும் ஏனைய எழுத்துக்களின் மடிப்பைக் கிள்ளி எறிந்துவிட்டார்கள். ரகரத்தின் கீழ் மடிப்பிலே கை வைக்காதது அந்த ஒரு எழுத்தின் மீது கொண்ட "கருணையினால் அல்ல!" அப்படிக் கைவைத்தால் நேரக்கூடிய விபரீதங்களை உணர்ந்தமையாலேயே! ஆனால் மெய்யெழுத்துக்கான குறியீட்டின் கீழ்மடிப்பைக் கிள்ளியதால் நேர்ந்துவிட்ட இலக்கண விநாசத்தை இவர்கள் உணரவேயில்லை. இது இடைப்பிறவரல்: ா் என்ற குறியீட்டின் ரிஷி மூலம். இலக்கண வாடை சற்றேனும் பட்ட அச்செழுத்து வார்ப்போர் சிலர் இன்றும் ர் என்ற குறியீட்டை மட்டுமன்றி ரகர வரிசை முழுவதையுமே போஷிக்கிறார்கள். இலக்கண, இலக்கிய மரபு தழைக்கவேண்டும் என்ற தாகம் மிக்கவர்கள் இத்தகையவர்களிடமே எழுத்துக்களைக் கொள்வனவு செய்யவேண்டும். இது கணனி யுகம். எழுத்துக்களைப் பெரிதாகவும் சிறிதாகவும் அமைத்துக்கொள்வது மிக எளிதான காரியம். எழுத்தின் கீழ் மடிப்பு உடைந்துபோம் என்ற அச்சத்துக்கு இடமேயில்லை. இனி நம்முடைய கவனம், நம்முடைய இலக்கணம், நமது அலட்சிய புத்தியாலும் அறியாமையாலும் அநாவசியமாக உடைக்கப்படாது. காப்பதிலேயே குறியாக இருக்கவேண்டும்! வாழிய செந்தமிழ்!




(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அநுபவித்து உணர வேண்டியவற்றை அறிவின் துணை கொண்டு ஆராய முற்படுவது பயனற்ற செயலாக முடிவதுடன் ஆராய்ச்சிக்கு உரிய பொருளையும் இல்லையென்று கூறச்செய்துவிடும். எமது ஆசைகள் எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும் அவை பிறருடைய உணர்வுகளைப் பாதிக்கக் கூடாதென்று எமது உள்ளுணர்வு உறுத்துகின்றது அல்லவா? இந்த உள்ளுணர்வை நாம் மனச் சாட்சியென்று கூறுகிறோம். ஆண் பெண் உறவில் ஏற்படும் இன்பத்தை அநுபவித்து உணர முடியுமே தவிர அறிவால் ஆராய்ந்து அறிய முடியாது. அதுபோல இந்த மனச் சாட்சியை அறிவால் ஆராய்ந்து விடைகாண முடியாது. இப்படித்தான் அறிவால் ஆராயப்படும் தத்துவத்துக்கும் உணர்வால் உணரப்படும் பக்திக்கும் வித்தியாசம் உண்டு. எனவே விஞ்ஞானத்தால், அதன் தத்துவ ஆராய்ச்சியால், அதன் கருவி சாதனங்களால் எல்லாம் பொருள்வரைதான் ஆராய முடியுமே தவிர பொருளுக்கு அப்பால், அதற்குக் காரண காரியமாகவுள்ள மூல சாராம்சத்தை உணர்வினால் மட்டுமே உணர முடியும்.

அறிவுக்கு எல்லை உண்டு. அது ஓர் எல்லைவரை போய் நின்றுவிடும். ஆனால் உணர்வோ பொருளையும் கணித தத்துவங்களையும் காலத்தையும் கற்பனையையும் கடந்து செல்லக்கூடிய அற்புத சக்தியாகும். ஏகாக்கிரம் அதாவது எங்கும் நிறைந்த நிலை, வியாபகம், இன்பம், சத்தியம், நிர்க்குணம், அன்பு, ஆனந்தம் என்னும் சொற்களை நாம் கேட்கும்பொழுது அவற்றின் நிலைப்பாடுகளை நம்மால் உணர முடியுமே தவிர அறிவால் ஆராய்ந்து விளக்க முடியாது. அவை எவற்றாலும் ஆராய்ந்து கண்டறிய முடியாத மதிப்பீடுகளாகும். இப்படித்தான் யாவற்றையும் கடந்தும் யாவற்றிற்கும் உள்ளும் இருக்கின்ற கடவுளை உணர்வால் உணர்ந்து அநுபவிக்க முடியுமே அல்லால் அறிவால் ஆராய்ந்து அறிய முடியாது. எவ்வளவுதான் அறிவும் விஞ்ஞானமும் அதன் கருவி சாதனங்களும் வளர்ந்துள்ள போதிலும் உண்மையான விஞ்ஞானிகள் தாங்கள் காணாதது எத்துணை என்பதைத்தான் எண்ணி எண்ணி வியக்கிறார்கள். உதாரணமாக, இந்த அண்டத்தில் பல கோடி நட்சத்திர வலையங்கள் உறுப்புக்களாக (Galaxy) சுற்றிச் சுழன்று வருகின்றன. இதில் பால் வீதி என அழைக்கப்படும் நாம் வாழும் நட்சத்திர வலையத்திலுள்ள கோடிக் கணக்கான நட்சத்திரக் குடும்பங்களில் நமது சூரியனின் குடும்பமும் (solar syatem) ஒன்றாகும். அதில் நாம் வாழும் பூமி எம்மாத்திரம்? இந்தப் பூமியில் எங்கோ ஓர் மூலையில் மனிதனாற் கண்டுபிடிக்கப்படும் விஞ்ஞானப் புதுமைகள் எத்துணை நிலையற்றவை என்பதை உணராது எல்லாவற்றையும் கண்டுவிட்டது போலப் பேசுவது எவ்வளவு அறியாமை? தனது அறியாமையைக் காண்பவனே உண்மையான விஞ்ஞானி ஆவான். அறிவியல் என்னும்

விஞ்ஞானத்தால் அறிந்துகொள்ள முடியாத இந்த எல்லையற்ற பிரபஞ்சத்தின் சாராம்சத்தை, அதன் முழுமையை, மெய்ஞ்ஞானம் அதாவது பக்தி எப்படி உணர்த்துகிறது என்றால் அதை ஒருமைப்படுத்தி ஒன்று என்று விளக்குகிறது. எண்ணிக்கையில் வரும் ஒன்று வேறு. இந்த முழுமுதற் பொருளாகிய இறைவனை ஒன்று என்று கூறப் பயன்படுத்தப்படும் ஒன்று வேறாகும். இந்த ஒன்று, இதுவல்லால் வேறில்லை என்பதைச் சுட்டுவது. இதை ஆங்கிலத்தில் ABSOLUTE UNIT என்று கூறுவார்கள். இந்நிலையை 'சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன். நீயல்லால் பிறிது மற்றில்லை' என்று மணிவாசகர் கூறும்பொழுது பக்தியின் தலையாய அநுபவம் பெற்ற அந்த மகானின் உள்ளக் கிடக்கையை உணர முடிகிறது. கடந்து நிற்கும் ஒன்றை அறிதல் இயலாத காரியம். ஏனெனில் அறிதல் என்றாலே அளவுக்கு உட்பட்டதாக்குவது ஆகும். கடந்து நிற்பதென்றால் அதனை அறிய முற்படும் அறிவையும் கடந்து நிற்பதென்றே பொருளாகும். ஆனால் அறிய முயன்ற முயற்சியில் பயன் ஒன்றுண்டு. அது என்னவெனில், கடந்து நிற்பது முற்றிலுமாக அறிய முடியாதென்பதை உணர்ந்து கொள்வதாகும். இந்த இடத்தில் அறிவு தன்னால் இதற்குமேல் ஆராய முடியாதென்பதைக் கண்டு நம்மை உணர்விடம் ஒப்படைத்துவிடுகிறது. இதை ஆங்கிலத்தில் 'we can not know the infinite for to know is to limit, but we can know the fact for this is implied in the act of knowing' என்று Mystism and Religion என்ற நூலில் ஓர் ஆங்கிலப் பெரியார் தெளிவுபடக் கூறியிருக்கிறார். இக் கருத்தை மணிவாசகரும் தாயுமானவரும் என்றோ கூறியிருக்கிறார்கள். இதுவரைதான் அறிவின் எல்லை உள்ளது. இதன் பின் உணர்வின் மூலந்தான், பக்தி மூலந்தான் நாம் உணரமுடியும். பக்தி அநுபவத்தில் உணர்வு மூலம் திடீரென்று ஒரு காட்சியைப் பெறுவது சாதாரணமாக நடக்கக் கூடியதே. தெய்வீக ஆற்றல் மூலம் அக மனத்துள் பளிச்சிடும் சிலவற்றை ஞான ஒளியென்று கூறுகிறார்கள். இப்படி அகத்தில் பளிச்சிடும் ஒளி அறிவியலாளர்களுக்குத் தோன்றுவதற்கு வாய்ப்பில்லை. உணர்வால் தேடுபவர்களுக்கே பளிச்சிட வாய்ப்புண்டு. எனவே அறிவுக்குக் காரணமாக உள்ளதை அறிவுக்கு அப்பால் ஆனதை அறிவால் அறிந்துகொள்வது கடினமாகும். அறிவு அதன் எல்லைவரைதான் எம்மைக் கூட்டிச் செல்லும். அந்த எல்லைக்கு அப்பால் இருப்பது உணர்வு. உணர்வு இன்றி அறிவு செயற்பட முடியாது. இதை நாம் அநுபவத்திற் காண்கிறோம். எனவே உணர்வைத் தொடாத அறிவால் மனித சமுதாயத்திற்குப் பயனில்லை. அறிவின் எல்லைக்கு அப்பால் உணர்வே அதன் நிர்க்குண நிலையாகிய ஆனந்த எல்லைக்குள் நம்மை இட்டுச் செல்கிறது. இதுவே நிர்விகற்ப சமாதி நிலையாகும். அறிவுக்கு எட்டாத, உணர்வின் தோற்றுவாயாக இருக்கின்ற நிர்விகற்ப நிலையைத்தான் பட்டினத்தடிகள் பின் வருமாறு கூறுகிறார்.

பூதங்களற்று பொறியற்று சார் ஐம்புலன்களற்று
பேதங்களற்று பேராசை தானற்று பின்முன்னற்று
காதங் கரணங்களும் அற்றவான் அந்தக் காட்சியிலே
பேதம் களைந்திருப்பேன்

என்று அற்புதமாகக் கூறியிருக்கின்றார்.

இந்தப் பிரபஞ்சம் தோற்றுவதற்கு முன் உருவமற்ற சுத்த வெளியாய் சுத்தப் பிரம்மமாய் நிர்க்குணமாய் இருந்த நிலையை பரவெளி என்று கூறியிருக்கிறார்கள் சித்தர்கள். இந்தப் பரவெளியில் தொண்ணூற்றாறு தத்துவங்களும் தங்கள் தனித்துவத்தை இழந்து வேறுபாடு இன்றி ஒன்றாக நின்றனவாம். இந்த வெட்ட வெளியில் ஜீவாத்தும உணர்வு கலக்கும்போது தத்துவங்களால் விளைகின்ற துன்பங்கள் தொலைந்துபோகும். இன்பம் பெருகும். இந்த நிர்விகற்ப நிலையை அறிவால் ஆராய்ந்து விளக்க முடியுமா? முடியாது. இது விகற்பங்கள் அற்றதாய் பேதங்கள் அற்றதாய் இருப்பதால் இங்கு விசாரங்களுக்கு இடமேயில்லை. எனவே விசாரங்களுக்கு இடமில்லாத இடத்தில் அறிவுக்கு வேலையில்லை. நிர்விகற்ப நிலையை, இந்த உண்மையை உணர்வுதான் உணர முடியும். இது ஆன்மா தனியாகக் காணும் காட்சியாகும். சொற்களால் இதை வர்ணிக்க முடியாது. சொல்லற நிற்கும் நிலை இதுவாகும். அறிவிலும் பார்க்க உணர்வு மிகமிக உயர்ந்தது. ஆகவே தத்துவங்களை அறிவால் ஆராய்ந்து உண்மையை அறிய முடியாது குழப்பத்தில் சிக்குவதிலும் பார்க்கப் பக்தியால் மெய்ப் பொருளை உணர்ந்து கண்டு

ஆனந்தம் அடைவது எவ்வளவோ மேலாகும். அறிவிலும் பார்க்க மெய்ப்பொருளை உணர்த்த வல்ல உணர்வு வழி மேலானதாகும். விஞ்ஞானத்தாற் கண்டுபிடிக்கப்பட்ட மிக உயர்ந்த மருந்துகள் எனப் போற்றப்படும் சில மருந்துகள் சில காலத்திற்குப் பின் சரியில்லாதனவென அவற்றைக் கண்ட விஞ்ஞானமே கண்டு தடுமாறுகின்றது. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல விஞ்ஞானத்தாற் கண்டுபிடிக்கப்பட்ட அணு ஆயுதம் போன்ற பல கொடிய பொருள்கள் மானிடத்தின் அமைதியைக் குலைத்து அதன் அழிவுக்கு வழிவகுத்து நிற்பதைக் காண்கிறோம். ஆனால் எமது முன்னோர்கள் காட்டிய மெய்ஞ்ஞானப் பாதையில் பக்தியின் மூலம் ஆத்மீக ஒருமைப்பாட்டை அடையும் வழி யாவருக்கும் திறந்துள்ளது. எனவே நாம் ஒவ்வொருவரும் அவ்வழி சென்று பயனடையலாம். ஆனால் மிகச் சிலரே அவ்வழியிற் செல்கின்றார்கள். காரணம் போலியாகப் பூசையில் ஈடுபட்டு ஆடம்பரமாகப் பூசை செய்வோரும் தமக்குப் பக்தி உள்ளது என நினைப்போரும் பிறரை அப்படி நினைக்குமாறு செய்வோருமாகப் பலர் உள்ளார்கள். இப்படியான இந்தப் போலிப் பக்தர்களும் மேற்கு நாட்டு மருந்துகள் மூலம் ஒருமைப்பாட்டைக் காண முயலும் சிற்பிகளும் ஒரே மனவியல்பு உடையவர்களே. தற்போது உள்ள சமயங்களை எடுத்துக்கொண்டால் அவை அனைத்தும் எந்த அடிப்படையிற் தோன்றினவோ அந்தக் கொள்கையைக் காற்றிற் பறக்க விட்டுவிட்டன. தற்போது அவை வாணிப நிறுவனங்களாக மாறிவிட்டன. ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தாலும் பணக்காரன் வீடுபேறு அடைய முடியாதென்ற யேசுபிரானின் சமயத்தைப் பரப்பும் நிறுவனமோ இன்றுள்ள உலகப் பணக்காரர் ஒருசிலரில் தானும் ஒன்றாக விளங்குகிறது. இதுபோல எடுத்தமொழியாற் சோதிக்க வேண்டா, சுடர்விட்டு நின்றனன் எங்கள் சோதியான் என்று ஞானசம்பந்தர் கூறியிருந்தும் அவர் கொள்கையைப் பரப்பும் மடங்களோ ஒருவர் பிறப்பாற் சைவரா என்ற ஆராய்ச்சியிலும் சாத்திர நூல்களை அக்குவேறு ஆணிவேறாக ஆராய்வதிலும் காலத்தைக் கழிக்கின்றனர். மக்களைச் சுரண்டி வாழும் நிறுவனங்களாகச் சமய நிறுவனங்கள் மாறிவிட்டன. இதிலிருந்து நாம் விடுபட வேண்டும். மானிடர் அமைதியாக வாழ வேண்டும். சுரண்டல்களையும் ஆலயங்களில் நடக்கும் ஆடம்பரங்களையும் தவிர்த்து பக்தி வழியில் நடக்க நாம் முயலவேண்டும். வாழ்க தமிழ்: வளர்க தமிழ்க் கலாசாரம். வணக்கம்.

---

# குறித்து வைக்கவேண்டிய தினங்கள்

7-11-96 ஏகாதசி விரதம்
8-11-96 பிரதோஷ விரதம்
9-11-96 சதுர்த்தசி ஸ்நானம்
10-11-96 தீபாவளி கேதாரகௌரி விரதம்
11-11-96 ஸ்கந்த ஷஷ்டி விரதம்
15-11-96 ஸ்கந்த பஞ்சமி
16-11-96 ஸ்கந்த ஷஷ்டி சூர சங்காரம்
18-11-96 சோமவாரம்
21-11-96 உத்தான ஏகாதசி விரதம்
22-11-96 பிரதோஷ விரதம்
24-11-96 பூரணை விரதம்
25-11-96 விஸ்ணுவாலய தீபம்
02-12-96 சோமவாரம்
06-12-96 ஏகாதசி விரதம்
08-12-96 பிரதோஷ விரதம்
09-12-96 சோமவாரம்
10-12-96 அமாவாசை விரதம்
14-12-96 சதுர்த்தி விரதம்
15-12-96 விநாயக சஷ்டி விரதம்
16-12-96 மார்கழி மாதப் பிறப்பு
20-12-96 ஏகாதசி விரதம்
22-12-96 பிரதோஷ விரதம்
23-12-96 பாஷாண விரதம்
24-12-96 பூரணை விரதம்
25-12-96 உதயம்

தொகுப்பு : அமுதா

* ESTATE AGENTS
* LETTING
MANAGEMENTS

TILKO
PROPERTY SERVICES

* PROPERTY
MAINTENANCE

வீடுகளை வாடகைக்கு வழங்குவதில் East London, Essex பகுதிகளில்
நம்பிக்கை, நாணயம் மிக்க
சேவையை வழங்குவதில்
முன்னணியில் திகழ்பவர்கள்.

Walthamstow Branch
252, Hoe Street
Walthamstow
London E17 3AX
Tel: 0181 -520 9968
Fax: 0181 503 7661

Ilford
101, Cranbrook Road,
Ilford
Essex
IG7 4PD
Tel: 0181 -514 1422
Fax: 0181 553 3991

Eastham Branch
213, High Street
Eastham, London
E6 1JD
Tel: 0181- 472 0029
Fax: 0181 503 5996

லண்டனில் சமயநூல்கள் சோதிட நூல்கள்

குரு புத்தகசாலை

GURU BOOKS

எங்களிடம்

□ ஆறுபடை வீடுகள் □ கதிர்காமப் பிரபந்தம் □ சங்கராச் சாரியார் அருளிய தெய்வத்தின் குரல் □ பொய்யிலி மாலை □ திருமூலரின் திருமந்திர விருந்து □ திருமுருக கிருபானந்த வாரியார் எழுதிய நூல்கள் □ கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்து மதம் □ இந்து சமயக் களஞ்சியம் □ திருக்குறள் □ பகவத்கீதை □ சிறீ லட்சுமி வரலாறும் வழிபாடும்.

மற்றும்
பிரபல எழுத்தாளர்களின்
(சாண்டில்யன், கல்கி, பாலகுமாரன், பார்த்தசாரதி, லஷ்மி, ரமணிசந்திரன்)
நாவல்கள் சிறுகதைத் தொகுப்புகள்
ஆகியன நியாய விலையில் உள்ளன.

P. SAPAPATHY
106, Drummond Street, London Nw1 2 HN, UK
Tel : 0171 388 3939

# பிரதோஷ வழிபாடு

-தேவிதாசன்-

## பிரதோஷ மகிமை

இறைவனின் பேரருளைப் பெற்று இனிதே வாழப் பல வகையான பூசைகள் நடாத்தப்படுகின்றன. அவற்றுள் மிகச் சிறப்பாக கருதப்படுவது பிரதோஷ நாள் வழிபாடாகும். இறைவனை எப்பொழுது பூஜித்தாலும் பலன் உண்டு என்றாலும் சில குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நேரத்தில் பூசித்தால் முழு பலனையும் அடையமுடியும். பலர் பிரதோஷ வழிபாட்டின் மூலம் பல வகைத் தடைகள் விலகப் பெற்று பெறுதற்கரிய செல்வங்களைப் பெற்று மகிழ்ந்து இருக்கின்றார்கள்.

பிரதோஷ காலம் என்றால் பகல் முடியும் நேரம் தொடங்கி இரவுக்கு அடையாளமாக வானில் சந்திரனும் நட்சத்திரங்களும் தோன்றும் நேரம் வரை ஒவ்வொரு மாதமும் அமாவாசையில் இருந்து 13ம் நாளும் பௌர்ணமியில் இருந்து 13ம் நாளும் திரயோசி திதியாகும். அன்று தான் பிரதோஷ நாள். மாதம் இரண்டு பிரதோஷ நாட்கள் வருகின்றன.

## வழிபடும் முறை:

பிரதோஷ நாளன்று அதிகாலை எழுந்து காலைக் கடன்களை முடித்து இறைவன் நாமாவழிகளைக் கூறி பூசித்தல் வேண்டும். எதுவும் உண்ணக்கூடாது. சிறப்பாகச் செய்ய விரும்புவோர் ஆலயம் சென்று மாலையில் சிவபிரானுக்கும் ரிஷதேவருக்கும் அபிஷேகம் செய்தல் வேண்டும். ரிஷபதேவருக்கு அறுகம்புல் மாலை வில்வம் மாலை அணிவிக்க வேண்டும். மாவினால் அகல் செய்து தூய்மையான பசு நெய்யிட்டு விளக்கு எடுத்தல் வேண்டும். காரரிசியில் வெல்லம் கலந்து ரிஷப தேவருக்குப் படைத்தல் வேண்டும். சிவபெருமானுக்கு வில்வம் இலை மாலை சாத்தல் நன்று. ரிஷபதேவரின் கொம்புகளுக்கு இடையே பார்த்துச் சிவபிரானைத் தரிசித்தல்வேண்டும். பிரதேஷ காலத்தில் மட்டும் வழக்கமாக வருவது போல் ஆலயப் பிரதட்சனம் வருதல் கூடாது அபர தட்சணம்வருதல் வேண்டும்.

ரி- ரிஷபம்

ச-சண்டிகேசுவரர்.

கோ-கோமுகை

ரிசரிகோ

ரிசகோ

ரிசரி.

மேலே உள்ள எழுத்துக்கள் ஒரு முறை வரும் அபரதட்சணத்தைக் குறிப்பிடுகின்றது. அதாவது இடப தேவரைத் தரிசித்து அங்கு நின்று இடமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்து சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் இடபதேவரை தரிசித்து அங்கு நின்று வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து கோமுகியை கடவாது முடியை தரிசித்து முன் சென்ற வழியே திரும்பிவந்து இடபதேவரை தரிசித்து அங்கு நின்று இடமாகச் சென்று சண்டேசுவரரை தரிசித்து அங்கு நின்று வந்தவழியே திரும்பி இடபதேவரை தரிசியாது வலமாகச்சென்று கோமுகியை சேர்ந்து அங்கு நின்று திரும்பி வந்து இடப தேவரைத் தரிசித்து இடமாகச் சென்று சண்டேசுவரரைத் தரிசித்து திரும்பி வந்து இடபதேவரை தரிசித்து அவருடைய இரண்டு கொம்பின் நடுவே பிரணவத்தோடு கூட ஹர ஹர என்று சொல்லி சிவபெருமானை தரிசித்து வணங்குதல வேண்டும். இது ஒரு பிரதஷணம் ஆகும். இதுபோல் மூன்று முறை பிரதஷணம் செய்தல்வேண்டும்.

## பிரதோஷ பூசை தோன்றிய வரலாறு.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே அடிக்கடி போர் நிகழும். இதனால் அசுரர்களால் தங்கள் குலம் அழிந்து விடுமோ என்ற அச்சம் தேவர்கள் உள்ளத்தை வாட்டியது. முதுமை மரணம் தங்களைஅணுகாமல் என்றும் இளமையோடு வாழ ஏதாவது வழி கண்டுபிடிக்க வேண்டும் என திட்டமிட்டனர். தேவர்கள் அனைவரும் பிரம்மாவிடம் சென்று தங்கள் திட்டத்தை தெரிவித்தனர். பிரம்மா அனைவரையும்

அழைத்துக் கொண்டு திருமாலிடம் சென்று தேவர்களின் கருத்தை வெளியிட்டார். பாற்கடலை கடைந்து அதிலிருந்து வரும் அமிர்தத்தை உண்டால் முதுமை மரணம் இன்றி என்றும் இளமையோடு வாழலாம் என்று திருமால் கூறினார். திருமால் குறிப்பிட்டபடி அமிர்தம் பெறமுடிவு செய்து தேவர்களும் பிரம்மாவும் மந்திரமலையை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்பை கயிறாகவும் கொண்டு பாற்கடலை கடைய தொடங்கினார்கள். அசுரர்கள் சும்மா இருப்பார்களா? அவர்களும் கலந்து கொள்ள வந்தனர். திருமால் தந்திரமாக தேவர்களுக்கு வால் பக்கமும் அசுரர்கள் தலை பக்கமும் நின்று பாற்கடலை கடைய ஏற்பாடு செய்தார். திருமால் ஆமை வடிவெடுத்து கடலுக்கடியில் சென்று மந்தர் மலையை தாங்கினார். வாசுகி வலி பொறுக்க முடியாமல் விஷத்தை கக்கியது. கடலில் இருந்தும் விஷம் தோன்றியது. வாசுகியின் ஆலமும் கடலில் தோன்றிய ஆலமும் சேர்ந்து ஆலாலமாகி புகை மண்டலம்போல் வடிவெடுத்தது. அதன் கொடுமை தாங்க முடியாமல் தேவர்களும் மற்றவர்களும் சிதறி ஓடினர். ஆமை வடிவம் விடுத்து மேலே வந்த திருமாலின் பளிங்கு நிறமும் புகையால் கரு நிறமாக மாறியது.

சிவபெருமானிடம் புகலிடம் தேடி திருமால், பிரம்மா, தேவர்கள் ஆகியோர் கயிலையை நோக்கி ஓடி வலமாகச் செல்ல முயன்றனர். அவர்கள் கயிலையை வலம்செல்ல முடியாமல் விஷமண்டலம் தடுத்தது. அதனால் அப்பிரதட்ஷணம் இட்டு ஓடினர். சிறிது தூரம் சென்றதும் அங்கும் விஷமண்டலம் தாக்கவே மீண்டும் திரும்பி ஓடினர். இப்படி தேவர்கள் அன்று கயிலையை அப்பிரதட்சணம் வந்த காரணத்தால் தான் சிவாலய பிரதோஷ நாள் அன்று அப்ரதட்சணம் வரும்முறை பின் போடப்பட்டது.

பின்பு தேவர்கள் ரிஷபதேவரின் உதவியுடன் சிவபெருமானை தரிசனம் செய்தனர். தங்கள் செயலையும் ஆலாலத்தின் கொடுமையையம் கூறி தங்களை காப்பாற்றும்படி வேண்டினர். கருணையே வடிவான எம்பெருமான் தேவர்களை காக்க எண்ணி ஆலாலத்தை திருவாயில் இட்டு விழுங்கினார். பின்னர் மீண்டும் சென்று பாற்கடலை கடையுமாறு பரமன் திருவாய் மலர்ந்தார். துவாதசி அன்று அதிகாலையில் கடலில் இருந்து அமிர்தம் தோன்றியது. அதை தேவர்கள் பகிர்ந்து உண்டு மகிழ்ச்சியில் அன்று முழுவதும் தேவர்கள் ஆடியும் பாடியும் பொழுது போக்கினர். மறுநாள் திரயோதசி அன்று தேவர்கள் முதலில் சிவபெருமானை வணங்காமல் ஆடியும் பாடியும் பொழுதை போக்கியதற்காக வருந்தினர். அனைவரும் கயிலாயம் சென்று பரமனிடம் தங்கள் குற்றத்தை மன்னித்துவிடுமாறு வேண்டினர். அவர்களை மகிழ்விக்க எண்ணிய பரமன் அம்பிகை காணும்படி ரிஷபதேவரின் கொம்புகளுக்கிடையே நின்று ஆனந்த தாண்டவம் ஆடினார். அதனால் தான் ரிஷபதேவரின் கொம்புகளுக்கிடையே பார்த்து லிங்கமூர்த்தியை தரிசிக்கும் முறை பின்போடப்பட்டது. பரமன் ஆடியநேரமே பிரதோஷகாலம் . அன்றைய நாள் சனிக்கிழமை. அதனால் தான் சனிப்பிரதோஷணம் சிறப்புடையது. பிரதோஷண நாள் அன்று திருமால் கயிலையில் இருந்ததை நினைவூட்டும் வகையில் இன்றும் பிரதோஷ வேளை. பெருமாள் கோவிலில் திரையிட்டு மறைத்து வைக்கப்பட்டு இருக்கும்.



NIRALA

தரமான இனிப்புணவுகளைத் தரும்
ஒரே ஸ்தாபனம்

We are proud to serve the community
Caterers for Weddings & Parties 100%
Pure Vegetarian Sweets & Savouries

بہترین مٹھائیوں کا لاجواب مرکز
شادی بیاہ اور پارٹیوں کے لئے جانا پہچانا نام

**NIRALA SWEETS LONDON**
316 HIGH STREET NORTH, MANOR PARK,
LONDON E12 6SA
TEL: 0181 548 1303/ 0181 548 1350
FAX 0181 548 1363
2ND BRANCH : 225 HOE STREET, WALTHAMSTOW E17


With Compliments

# K.R. GIFT SHOP

உங்கள் தேவைகளான
இந்தியன் எவர் சில்வர் பாத்திரங்கள்
வீட்டுப்பாவனைப் பொருட்கள்
பூசைத்திரவியங்கள், திருமணப் பரிசுப்
பொருட்கள் வாழ்த்து மடல்கள், இந்தியப்
புத்தகங்கள்போன்ற பொருட்களுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

## K.R.GIFT SHOP
**378 ROMFORD ROAD**
**LONDON E7 8BS**
**TEL: 0181 470 0486**

# VARSHI'S FOOD STORE



நியூமோல்டனில் ஒரே ஒரு தமிழ்க் களஞ்சியம்

**Speciality in Srilankan , Indian and English Product Under one Roof**

**Open Daily 8.00am - 11.00pm**

We stock all well known products like Global, Samco, Larics, Leela, and YKDALL News papers & Magazines including Asian Papers & Magazines

**99 BURLINGTON ROAD**
**NEW MALDEN, SURREY**
**KT3 4LR**
**TEL: 0181 336 0061**

# அந்திமக் கிரியைகள்

பிள்ளைகளினாலோ அல்லது சுற்றத்தவர்களாலோ செய்யப்படும் கிரியைகள், இறந்தவர்களின் ஆத்மசாந்திக்கு எவ்வாறு பயன்படும் என்று கேள்வி எழுவதுண்டு.

ஒருவர் செய்த வினைப்பயனுக்கு ஏற்பவே அவருக்குப் பிள்ளைகளும் சுற்றமும் அமையும்.

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்.

என்பர் பொதுமறை தந்த திருவள்ளுவர். தம் புதல்வரையோ தம் சுற்றத்தவரையோ தம் பொருள் என்பர் அறிந்தோர். எனவே அவர்கள் செய்யும் நல்வினைகள் இறந்தவரின் ஆன்மாவையும் சென்றடையும்.

ஒருவர் வீட்டுக்குப் போகும் வறியவனுக்கு உணவு கொடுக்க அவன் பசி தீருகிறது. அதை அந்த வீட்டுக்காரர் கொடுக்க நேர்ந்தது அவ் வறியவனின் நல்வினையே. அதுபோலப் புதல்வரினாலும் சுற்றத்தவராலும் இறந்தவரின் பெயரிற் செய்யப்படும் கிரியைகளும் அந்த இறந்தவர் செய்த நல்வினைப் பயன்களின் வினைவே.

நம்முடன் இருந்தவர்களிற்கு அவர்களின் இறப்பின் பின்னாற் செய்யவேண்டிய கடைமைகளைத் தவறாது செய்யவேண்டும். சூரபதுமனுடைய மகனான இரணியனது செயலை நாம் சிந்திக்க வேண்டும். போருக்குச் செல்லும் அசுரர்கள் யாவரும் இறப்பது திண்ணம் என்பதை இரணியன் அறிந்துகொண்டான். தானும் போருக்குப் போய் மாண்டால் தனது சுற்றத்தவர்களுக்குக் கிரியைகள் செய்ய எவரும் இருக்கமாட்டார்கள் என்பதை உணர்ந்த இரணியன், போருக்குப் போகும் ஆசையைத் தவிர்த்து, போருக்குப் போகாது விட்டதால் தனக்கு ஏற்பட்ட அவமானத்தையும் தாங்கிக்கொண்டு கிரியைகள் செய்வதே தனது பெருங்கடனாகக் கொண்டு போருக்குப் போவதைத் தவிர்த்தான்.

சுற்றத்தவரைப் பேணாது - மதியாது கடவுளை வழிபடுதல் பயன் தராது என்பதைக் கௌசிகர் சரித்திரத்திற் காண்க.

ஆன்மா வியாபகத் தன்மை கொண்டது. ஆதலினால் ஆத்ம சாந்திக் கிரியைகள் செய்வோர் சிரத்தையோடும் உள்ளுணர்வோடும் செய்வார்களாயின் அவை இறந்தோருடைய ஆன்மாவை அடைந்து முத்திக்கு வழி அமைக்கும்.

மரணம் அடைந்தோருக்குச் செய்யும் கிரியைகள் அபரக் கிரியைகள் எனப்படும். அபரம் என்றால் பிந்தியது என்பது பொருள். சிவநிலையுடன் ஆன்மாவைச் சேர்க்க இக் கிரியைகள் செய்யப்படுகிம் கிரியைகளும் அந்த இறந்தவர் செய்த நல்வினைப் பயன்களின் வினைவே.

நம்முடன் இருந்தவர்களிற்கு அவர்களின் இறப்பின் பின்னாற் செய்யவேண்டிய கடைமைகளைத் தவறாது செய்யவேண்டும். சூரபதுமனுடைய மகனான இரணியனது செயலை நாம் சிந்திக்க வேண்டும். போருக்குச் செல்லும் அசுரர்கள் யாவரும் இறப்பது திண்ணம் என்பதை இரணியன் அறிந்துகொண்டான். தானும் போருக்குப் போய் மாண்டால் தனது சுற்றத்தவர்களுக்குக் கிரியைகள் செய்ய எவரும் இருக்கமாட்டார்கள் என்பதை

உணர்ந்த இரணியன், போருக்குப் போகும் ஆசையைத் தவிர்த்து, போருக்குப் போகாது விட்டதால் தனக்கு ஏற்பட்ட அவமானத்தையும் தாங்கிக்G, சோதகும்ப சிரார்த்தம், சபிண்டீகரணம், மாசிகம், மாஸியம், ஆப்திகம் அல்லது வருட சிரார்த்தம், தர்ப்பணம் ஆகிய வகைகளிற் செய்யப்படுகின்றன.

1. உக்கிராந்திக் கிரியை:

இது உடலை விட்டு உயிர் நீங்கும் வேளையிற் செய்யும் கிரியையாகும். உயிர்த்துடிப்பு எனும் நாதம் இவ்வுடலில் இருந்து நீங்கும்பொழுது அங்கு மனம் பந்தங்களைவிட்டு நீங்கத் திருவைந்தெழுத்தையும் திருமுறைகளையும் ஓதி, உயிர் உடலிலுள்ள பற்றை விட்டுச்செல்லவேண்டும் என்பதே காரணமாகும். இதன்போது கோதானம் போன்ற சிலவகைத் தானங்கள் செய்வதுண்டு.

2. பிரேதக் கிரியையும் அஸ்தி சஞ்சயனமும்:

இவை சரீரத்தைச் சுத்திசெய்து அக்கினியாற் சுடும் கிரியைகள் ஆகும். கும்பத்தை வைத்துப் பூசை செய்து நிறைகுடமான சிவனைப் பூசித்து உடலை விட்டு நீங்கிய உயிர் சிவனை அடையக் கும்ப நீராற் பிரேதத்துக்கு நீராட்டி எண்ணெய், மஞ்சள், ஆடை முதலியவை உடலுக்குச் சாத்தப்படும். முற்றத்திற் பந்தலிட்டு நடுவே மெழுகி அரிசி பரப்பி உரல் உலக்கை வைத்து மஞ்சட்பொடி இட்டு இடிப்பார்கள். மணிவாசகர் அருளிய திருப்பொற்சுண்ணப் பாடல்களைப் பாடுவார்கள். பேரிகை கொட்டுவார்கள். அந்த உயிர்நிலை நாதம் என்பதைப் பேரிகை முழக்கம் வெளிப்படுத்துகிறது. அந்த நாதம் இதயத்தில் டக்-டக என ஒலித்த ஒலி உண்மைப்பொருள் அழிவற்ற அலைவரிசை உடலை விட்டு நீங்கிவிட்டது எனப் பறை அடிக்கப்படுகின்றது. இப்பொழுது பெயரும் ஊரும் நீங்கிய உடல் நாதம் அற்ற தன்மையில் பிரேதம் ஆகின்றது. உடல்நிலை ஆசா பாசங்கள் திருப்பொற்சுண்ணத்தால் இடித்துப் பொடிசெய்யப்படுகின்றன. இந்தப் பிரேதம் அக்கினியாற் சுடப்படுகின்றது.

பிரபஞ்சத்திலுள்ள மூலகங்களினால் ஆன இவ்வுடல் இந்த மண்ணோடு சேர்கின்றது. இவ்வுடல் அழிக்கப்படவில்லை. வேறொரு பொருளாக மாறுகிறது. அக்கினி, சிவனின் ஒளிநிலை அந்த உடலை ஆட்கொள்ளுகிறது. அஸ்தியைக் கடலிற் கரைக்கும்பொழுது நீருடன் கலக்கும் பொருள்கள் நீரிற் கரைய, கரையாத திண்மப் பொருள்கள் அடியில் மண்ணுடன் சேர்கின்றன. இவ்வாறாக அடிப்படைப் பௌதிக நிலைகளான திண்ம, திரவ, வாயு நிலைகளிற் பிரேதம் பிரிவடைகின்றது. இங்கு உடல் அவன் பொருளாக அமைவதனையும் உடலை இயக்கிய நாதம் - அந்த உயிர்த்துடிப்பு சிவநிலையை அடைய முயற்சிப்பதையும் நாம் காணலாம்.

3. அந்தியேஷ்டி

அந்திய என்றால் இறுதி, இஷ்டி என்றால் யாகம் என்று பொருள்படும்.

இந்த இறுதி யாகம் உடலை விட்டு நீங்கிய ஆன்மா மேலும்

பரிசுத்தம் அடைவதற்காகவும் அந்த ஆன்மா ஒரு உடலிற் பிறப்பைப் பெற்று அந்தியேஷ்டியுடன் நிறைவைப் பெறுவதற்காகவும் செய்யப்படுகின்றது. இறந்த உடலை மீண்டும் அதே நிலையில் ஒருவராலும் திட்டமிட்டு அமைக்க முடியாது. ஆன்மா விடுதலை பெற்று

நீங்குகின்றது. அந்த ஆன்மா உலக பந்த பாச நிலையை, முக்கியமாகப் பிள்ளைகளின் நினைவலைகளைக் கொண்டுசெல்வதனால் அதன் திருப்தியைப் பூர்த்தி செய்யும் விதத்தில் பிள்ளைகள் இக்கிரியை மூலம் தானம் பல செய்து அவ்வான்மா சிவநிலையை அடையப் பரம் பொருளை வேண்டுகின்றனர்.

இத்தான தர்மங்கள் , வீட்டுக்கிரிகைகள் என்ற முறையில் நக்னதானம், ஏகோதிட்டம், தசதானம், சபிண்டீகரணம் போன்ற கிரியைகள் மூலம் நடைபெறுகின்றன. இது அவரவர் வசதிக்கேற்ப நடாத்தப்படுகின்றன. குடை பாதரட்சை விளக்கு செம்பு நீர் பாய் தலையணை முதலியன தானமாக வழங்கப்படுகின்றன. இதில் சபிண்டீகரணம் மிக முக்கியமானதாகும்.' இந்த ஆத்மா சிவபதம் அடைய நல்ல பிதிர்களுடன் இணைக்கப்படல் வேண்டும். அதற்காக அவர்களின் சின்னமாகப் பிண்டங்களை வைத்து அவற்றிற்கு எதிராக இறந்தவரின் பிண்டமாக ஓர் பிண்டத்தைவைத்து எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தல் சபிண்டீகரணம் எனப்படும். தர்ப்பணம் என்பது எள்ளையும் நீரையும் கொடுத்து அவர்களுக்குத்திருப்தி செய்தல் எனப்பொருள்படும். இதன் மூலம் ஆன்மா மேன்னிலை அடைய பிதிர்கள் உதவுவர் என்பது நம்பிக்கை.

ஏகோதிட்டம் என்பது இறந்த திதிக்குரிய மாசிகமாகும். ஆன்மாவைத் திருப்தி செய்வதற்காக இந்தத் தானங்கள் அந்த ஆன்மாவை மட்டும் குறித்து நடைபெறுகின்றன. இதன் நிறைவில் பதினைந்து மாசிகங்களையும் ஒன்று சேர்த்துக் கிரியை முறைகளுக்குக் காலத்தினால் இடையூறு ஏற்படாமற் செய்யப்படுகின்றது.

சோதகும்ப சிரார்த்தம் எனப்படுவது ஆன்மா தனது தாகத்தை - உலகப்பற்றை நீக்கும் பொருட்டுச் செய்யப்படுவதாகும். இதில் நீர் நிறைந்த பாத்திரத்தை அவரின் படத்தின் முன்னே வைப்பர். இக்கிரியை சபிண்டீகரணத்தின் முன் செய்யப்படுவதாகும்.

ஆப்திகம் எனப்படுவது ஒரு வருட முடிவில் இறந்த திதியிற் செய்யப்படுவதாகும். இது ஒரு விரிவான கிரியை. வருடம் தோறும் இக்கிரியைகளைச் செய்வது அந்த ஆத்மா பெற்றோர் என்ற உடலமைப்பில் பிள்ளைகளுக்கு செய்த நன்றியை மறவாமற் செய்யப்படும் பதிற் கடமையாகும். இதன் போது வழங்கப்படும் தானம் இறைநிலை அடியார்களுக்கும் இயற்கைப் பாதிப்பு உள்ளவர்களுக்கும் வறியவர்களுக்கும் செய்வதன் மூலம் தமது பாவங்களைக் களைந்து பெற்றோர் விட்டுச் சென்ற ஆசைகளையும் நீக்க உதவுகின்றது. இது இறந்தவரின் நிலையிலேயே செய்யப்படுகின்றது. சிரத்தையுடன் ஒரு மனநிலையில் செய்யப்படுவதால் அது சிரார்த்தம் எனப்படுகின்றது. பிதிர்களுக்குரிய திக்கு தெற்கு. அத்திசையை நோக்கியே இக்கிரிகைகள் யாவும் நடைபெறும். மங்களகரமான பக்கம் வலப்புறம்.' பிதிர்க்கடமைகள் இடப்புறமாக நடைபெறும்.

ஆகவே இக்கிரியைகள் அறியாமையில் உள்ள மக்களை ஆன்ம ஈடேற்றத்திற்கு அழைத்துச் செல்கின்றன. இறைவனாக உயிர் இருக்கும் கோயிலாக இவ்வுடல் அமைகின்றது. இவ்வுடலில் உயிர் தங்கியிருக்கும்போதே இறைபண்பை வளர்த்துப் பிரபஞ்ச அன்பை வளர்த்து நாம் விழிப்புணர்வு அடைய முடியும். ஆகையால் இக்கிரியைகளை உணர்ந்து நிறைவேறாத அவாக்களுடன் நமது ஆன்மா நீங்காமல் இறைசிந்தையுடன் உடலை நீக்கி முக்திபெற முயற்சிப்போமாக!

ஓம் நமசிவாய.




## கலசம் சந்தாப் படிவம்

New/ Renewal

அன்புடையீர்,

கலசம் சஞ்சிகையைத் தொடர்ந்து இரண்டு வருடங்களுக்குப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன்

இத்துடன் அதற்கான (பவுண்கள்) பெறுமதியான காசோலையை அனுப்பி வைக்கின்றேன்.

Name:.......................................

Address: ..................................

..............................................

(காசோலைகள் SMS(UK) என்ற பெயருக்கு எழுதப்படுதல் வேண்டும்)

2 Years : £10.00 (UK)

2 Year : £14.00 (Europe)

# அணங்கினர் அவை

**அணங்கினர் அவையை இறையருள் பெற்ற மகளிரும், இறையடியார்களின் அருட்கனிவில் திளைத்தும் நம்மவர்களால் அறியப்படாத மாதரும் பொலிவிப்பர். அவற்றுடன் பெண்கள் விரும்பும் கலைகளும் அதில் சிறந்து விளங்கிய பாடல்களும் சிறு குறிப்புகளும் அலங்கரிக்கும்.**

**-சாலினி-**

## மனைவி என்னும் அருளமுதம்

சிவ நேயச் செல்வனான இராவணனைக் கொன்ற பாவம் ஸ்ரீராமரை விட்டபாடில்லை. முனீஸ்வரம் முதற்கொண்டு அயோத்திவரை அவன் சிவலிங்கங்கள் ஸ்தாபித்து வணங்கியும் பிரமகத்தி தோஷம் நீங்கவில்லையோ என்ற பயம் வசிட்டருக்கு.. சிந்தனை செய்கிறார்.

சிந்தனையின் பயனாக அயோத்தி எங்கும் முரசொலிக்கின்றது. "இராமரின் முடிசூட்டின்போது சொர்ணம் தானமாக ( பொன்தானம்) வழங்கப்படும். சொர்ணத்தைப் பெற எள்ளுத்தானத்தை வாங்கவாரீர்." இந்த முரசொலி சொர்ணவல்லியின் காதில் விழுகின்றது. பெயரில் சொர்ணம் இருந்ததே ஒழிய வாழ்நாளில் அவள் சொர்ணத்தைக் கண்டதில்லை.

எப்படிக் காண்பாள்அவள். முனிவரின் மனைவியல்லவா? ஆனால் இப்போ சொர்ணவிக்கிரகம் போல் அவள் மகள் மணத்திற்காக காத்திருக்கின்றாள். பொன் இல்லாத திருமணமா? முரசொலி தந்த தைரியத்தல் சிருங்கார முனிவரிடம் தன் எண்ணத்தை சொல்கிறாள்.

சிருங்கார முனிவனும் பொன்னாசையை வென்ற எனக்கும் பெண்ணின் திருமணத்திற்கும் பொன் வேண்டும் என மனைவியைப் பார்த்துச் சிரித்து சொர்ணவல்லி பொன்னுக்காக செய்த பாவங்கள் போகக் கொடுக்கும் எள்ளுத் தானத்தையா நான் வாங்குவது? இத்தனை காலமும் நான் செய்த தவம் எல்லாம் அவமானமாகப் போகாதா? என்ன நினைத்து இதனைச் செய்யச் சொன்னாய்? எனச் சினந்தான்.

முனிசிரேஷ்டரே! இராமன் பரமாத்மாவின் வடிவம் என்பது உண்மையானால் எள்ளுத்தானத்தை நீங்கள் பெறுவதால் இழக்கும் தேஜசும்,தவலிமையும் இராமன் நயன தீட்சையால் மீண்டும் வரத்தானே வேண்டும் என்றாள்.

சிருங்கார முனிவரும் மனைவியின் விருப்பப்படி மகளின் திருமணத்திற்காக என்ளுத்தானம் வாங்க உடன்பட்டார்.

சிருங்காரமுனிவர் எள்தானம் வாங்கவருகிறார் என்ற செய்தி வசிட்டருக்கு எட்டியது. சிருங்கார முனிவனார் எள்தானம் வாங்குவது இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்பதை வசிட்டர் உணர்ந்து கொண்டார் சிருங்காரரின் மனைவி சொர்ணவல்லி மிகுந்த அறிவுள்ளவள் என்பது அவருக்குத் தெரியும். அவள் அவரிடம் கல்வி பயின்றவள் தானே. குருவை மிஞ்சிய சிஷ்யையா? ...........

பொன் நாணயங்களுடன் எள்ளுத்தானத்தை வாங்கிய சிருங்கார முனிவர் தலை நிமிர்ந்து இராமரைப் பார்த்தார். அங்கே முகத்திரை தான் தென்பட்டது. அவர் எதிர்பார்த்து வந்தது நடக்கவில்லை. விஷமச் சிரிப்புடன் வசிட்டர் ஓரக்கண்ணால் பார்ப்பதையும் பார்த்தார். தன் தவம் தேஜசு யாவும் போய்விட்டது. என்பதை உணர்ந்த சிருங்கார முனிவர் மயங்கிச்சாய்ந்தார்.

இந்தச் செய்தி கேட்டு ஓடிவந்த சொர்ணவல்லி முனிவருக்கு மயக்கம் தெனிவித்தாள். இதற்குக் காரணம் வசிட்டரே என்பதை முனிவர் சொல்லக்கேட்டு வசிட்டரே குருவை மிஞ்சிய சீடரும் உண்டு என்பதை இன்றே உமக்கு உணரவைப்பேன் என முனு

முணுத்தாள்.

அது எப்படி என அவளை பார்வையால் வினாவினார். சிருங்காரர்.

முனிபுங்கவரே! நீங்கள் இழந்த தேஜசு தவம் யாவும் திரும்பப் பெற வழி இருக்கின்றது என்னுடன் வாருங்கள். வசிட்டரின் எண்ணம் நடக்காது. நடக்கவும் விடமாட்டேன். பெண் மதி கேட்ட பேதை என உங்களை உலகம் இகழவும் விடமாட்டேன். வாருங்கள் என்றாள்.

முனிபுங்கவர்–முனிவர்களில் சிறந்தவர்.

பெண்மதி– பெண்ணின் அறிவுரை.

சிருங்காரரும் அவளுடன் சென்றார். மங்கல மேளம் முரசொலிக்க வரிசங்கம் நின்றூத பட்டாபிஷேக ராமன் தேரில் பவனிவந்து கொண்டு இருந்தான். அந்தக் காட்சியை சொர்ணவல்லி காட்ட சிருங்கார முனிவர் கண்டார். இராமனும் பரந்தாமன் என்னும் நிலையில் நின்று கருணை வழிந்தோட சிருங்கார முனிவரைப் பார்த்தான். இழந்தவை மட்டுமா? வேண்டியவை யாவும் பெற்றார். சிருங்கார முனிவர்.

இராமின் அருகே இருந்த வசிட்டர் சொர்ணவல்லியை நோக்கி முறுவலித்தார். குருவை மிஞ்சும் சிஷ்யையும் உண்டு. என அவள் வாய் மீண்டும் முணுமுணுத்தது.

இல்லை மகளே! மனிவியெனும் அருளமுதம் கிடைத்ததால் சிருங்காரன் வாழ்ந்தான் என்றார் வசிட்டர்.

# விபூதி ( திருநீறு)

விபூதி என்பதற்கு ஐச்வர்யம் என்று பெயர். சிவனின் திருமேனியில் தோன்றியது விபூதி. வி- மேலான, பூதி - செல்வம். இதனை அணிபவருக்கு மேலான செல்வத்தைக் கொடுக்கும்.

தீவினைகளை நீறு படுத்துவதால் திருநீறு எனவும் அழியாத செல்வத்தைக் கொடுப்பதால் விபூதி எனவும் ஆன்மாக்களிடம் உள்ள மலமாசைக் கழுவுவதால் சாரமென்றும், அறியாமையை அழித்து ஞானத்தைத் தருவதால் பஸிதம் எனவும் பெயர்.


தமிழ் திரைப்படங்கள் வாடகைக்கும் விற்பனைக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

2000 இற்கும் அதிகமான தெரிவுகள்
**Audio cassettes from £1.50 to £2.00**
புதிய பழைய திரைப்படப் பாடல்கள்
பட்டிமன்றம்-நாதஸ்வரம்

தமிழ்த்திரைப்பாடல்கள் அடங்கிய **3Hrs video cassettes from £3.50** மட்டுமே

ஆலயங்களுக்குத் தேவையான பொருட்கள். திருமணம் மற்றும் விசேடங்களுக்குத் தேவையான பொருட்கள்.

**VANEE AGENCY**
**-SINCE 1979**
ஐரோப்பாவில் முதலாவது தமிழ்க்கடை

அன்பளிப்புப் பொருட்கள் குத்துவிளக்கு, நிறைகுடம் சுவாமிப்படங்கள், சிலைகள்

யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடுகள் அரிச்சுவடிகள் ஈழத்து இந்திய தமிழ்நூல்கள்


**317 High street North,**
**Manor park**
**London E12, 6PH**
**Tel: 0181 471 8366**

**We do catering for any function. Chairs available for rent**

# WESTERN JEWELLERS

லண்டனில் ஒரே ஒரு தமிழர் நகை மாளிகை

# வெஸ்டன் ஜுவலர்ஸ்



தாலி, தாலிக்கொடி, ராசிக் கேற்ந மோதிரங்கள்
திருமண மோதிரங்கள், மனதைக் கவரும் டிசைன்களில் பதக்கம்
காப்புகள், சங்கிலி, தோடு, அட்டியல், சிமிக்கி, கை செயின் என நீங்கள்
விரும்பிய அத்தனை நகைகளையும் 22 கரட் தங்கத்தில் பெற்றுக்
கொள்ள நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்

## வெஸ்டன் ஜுவல்லர்ஸ்

அது மட்டுமல்ல........

தாலிப்பொன் உருக்கை சிறப்பாக நடத்தவேண்டுமா... இனி அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். அதற்கான ஒழுங்குகளை எந்தக் குறையும் இன்றி அவர்களே செய்து தருவார்கள்.

உங்களுக் காகவே வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும் தங்க நகை மாளிகை

## 230 UPPER TOOTING ROAD, LON-DON SW17

## TEL : 0181 767 3445

# Sri Kannan Stores
## EDMONTON

நம்பிக்கை



நாணயம்

நயம்

உங்களுக்குத் தேவையான தமிழ், ஆங்கிலசஞ்சிகைகள்
தமிழ், ஹிந்தி, ஆங்கில,வீடியோ, ஓடியோக்கள்
மற்றும் இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்ட
உணவுப் பண்டங்கள் உடன் மரக்கறிவகைகள்
ஆகியவற்றை மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
கொள்வனவு செய்வதற்கு
நம்பிக்கையோடு அணுகவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

# ஸ்ரீ கண்ணன் ஸ்ரோாஸ்

**249-251 Fore Street, Edmonton, London N18**
**Tel : 0181 884 4979 Fax : 0181 345 6317**
25 புது கடை, பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம், இலங்கை

# KUMARANS
# குமரன்ஸ்
## தமிழ்க்கடை
## KUMARAN BOOK CENTRE

எம்மிடம்
தமிழ்
புத்தகங்களும்
விற்பனைக்குண்டு

அரசியல் பொருளாதார புத்தகங்களோடு பெருமளவிலான
ஈழ, தமிழக பிரபல எழுத்தாளர்களின் நாவல்களும்
திருவாசகம், திருப்புகழ், திருமுறைகள்
பண்டைத் தமிழ் இலக்கியங்கள்
ஆகியன நியாயமான விலையில் கிடைக்கும்

லீலா
தயாரிப்புகளின்
அங்கீகாரம்
பெற்ற
விநியோகஸ்தர்கள்

அரிசிமா, குத்தரிசி, மிளகாய்த்தூள் மற்றும் பல
லீலா தயாரிப்புகளை
எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

**532-536 FOREST ROAD, WALTHAMSTOW,**
**LONDON E17 4NB**
**TEL : 0181 925 7720**
**FAX : 0181 925 7721**

# GLEN CARRIERS LIMITED

14 Allied Way, Off Warple Way, Acton London W3 0RQ.
Tel: 0181-740 8379 / 0181 749 0595
Fax: 0181-740 4229 Telex: 929657 Glenca G

**SHIPPING - AIR FREIGHT - TRAVEL**

UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC.

TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS
**MAIN AGENT FOR AIRLANKA**

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE, ALL YOUR GOODS GO TO OUR BONDED WAREHOUSE IN COLOMBO
WE ALL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES

உங்கள் விமானப் பயண ஒழுங்குகளுக்கும் உங்களின் பொருட்களை ஸ்ரீ லங்காவிற்கு அனுப்புவதற்கும் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவையினைப் பெறுவதற்கும்
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்

# BONDED WAREHOUSE

## LAKSIRISEVA, 253/3 AVISSAWELLA RD, COLOMBO 14,

# TEL:575576


சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் அச்சமைப்பும் வடிவமைப்பும் செய்யப்பட்டு வாசன் அச்சகத்தினரால் இலண்டனில் அச்சிடப்பட்டு சைவ முன்னேற்றச் சங்கத்தால் 2 –11 –96 அன்று வெளியிடப்பட்டது.